Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE BELANADU
National Tamil Daily

தொலைபேசி எண் : 4?
போன் : 389

இதழ் 340
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் தை 7 ஜுலை 22 புதன்கிழமை (20-1-71)

நவநாகரீக நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
ஹரன் ஜுவல்லர்ஸ்
போன் 444 தந்தி இரத்தினம்ஸ்
50.கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

### கொழும்பிலும் மற்றும் சில இடங்களிலும்

# ரஷ்ய, ஹிந்தி ஜெர்மன் மொழிகள் கற்பிக்கப்படும்

## கல்வி அமைச்சு நடவடிக்கை

கோட்டை, செவ்.

ஹிந்தி, ஜெர்மன், ரஷ்ய மொழிகள் இரண்டாவது மொழியாக கற்பிக்கப்படவுள்ளன, கொழும்பிலும் மற்றும் சில பாடசாலைகளிலும் முதலில் இம்மொழிகளைக் கற்பிப்பதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

கொழும்பிலும் மற்றும் சில பாடசாலைகளிலும் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகக் கற்பிப்பது போன்று ரஷ்ய ஹிந்தி ஜெர்மன் மொழிகளையும் கற்பிப்பதற்கான திட்டமொன்றைக் கல்வியமைச்சு தயாரிக்கின்றது.

இம்மொழிகளைக் கற்பிப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சு விரைவில் மேற்கொள்ளுமென கல்வியமைச்சின் நிரந்தர செயலாளர் திரு. பிரேமதாஸா உடுகம தெரிவித்துள்ளார்.

மேற்படி மொழிகளைப் போதிப்பது பற்றி அவர் மேலும் கூறியதாவது:-

முதன் முதலில் கொழும்பு நாளந்தா கல்லூரியில் ரஷ்ய மொழி இரண்டாவது மொழியாகப் போதிக்கப்படவிருக்கிறது. இதையடுத்து மற்றும் பாடசாலைகளிலும் மேற்படி மொழிகளைப் போதிப்பதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும். இம்மொழிகளைப் போதிப்பதற்குத் தேவையான ஆசிரியர்கள், நூல்கள் ஆகிய வசதிகள் கிடைப்பதற்கு அமையவே இம்மொழிகளின் போதனைகள் அமையும்'

## வங்காலை கிராமச்சபை பகுதியில் அபிவிருத்திசபை

முசலி, செவ்

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வங்காலைக் கிராம சபைப்பகுதி அபிவிருத்திச் சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இம் மாவட்டத்தில் ஏறக்குறைய 18 கி. ச அபிவிருத்திச்சபைகள் அமைக்கப்படவிருக்கின்றனவென்றும் வங்காலையிலேயே முதலாவது அபிவிருத்திச்சபை அமைக்கப்படுவதாகவும் சபை அங்குரார்ப்பண வைபவத்தின் போது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு சங்கரப்பிள்ளை கதிர்காமநாதன் தெரிவித்தார்.

இச்சபைகளின்மூலம் கிராமங்களில் விவசாயம், கைத்தொழில், பொருளாதாரம், நீர்ப்பாசனம் முதலியன அபிவிருத்தியடையவும் வேலையில்லாத் திண்டாட்டம் அற்றுப் போகவும் வழியேற்படுமென்றும் இவற்றுக்கு அரசு நிதி நன்கொடை வழங்குமென்றும் கிராமப் பெருமக்கள் தத்தம் தேவைகளைத் தமக்குத் தெரிவித்தால் தாம் அவற்றைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு ஆவன செய்வதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தில் வங்காலை கிராமசபைப் பிரிவு எல்லைக்குள்ளிருக்கும் பல முக்கிய திட்டம்பற்றி ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்துக்கு வங்காலை கிராமசபை வட்டார உறுப்பினர்கள், கிராமமுன்னேற்றச்சங்க, மீன்பிடிச்சங்க, பயிர்ச் செய்கைக் குழுத் தலைவர்கள் ஆகியோர் சமுகமளித்திருந்தனர். வைபவம் கிராமசபை மண்டபத்தில் நடைபெற்றது. முசலிக் காரியாதிகாரி திரு வை. சொக்கலிங்கம் இதனை ஒழுங்கு செய்திருந்தார். இக்கூட்டத்தில் மன்னார் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிறற் மன்னார் மாவட்ட நீர்ப்பாசனபொறியியலாளர் திரு என் கனகலிங்கம் உட்பட பல அரசாங்க இலாகா ஊழியர்களும் வந்திருந்தனர்.

## எளிமையான திருமணத்துக்கு பாராட்டு

கோட்டை, செவ்

'பிரபல வர்த்தகர்களான திரு எஸ் ரி சின்னத்துரையும் செனட்டர் திரு ரி நீதிராஜாவும் தங்கள் பிள்ளைகளுக்கு மிக எளிமையான முறையில் நடாத்தி வைத்த திருமணம் தற்போதைய சூழ்நிலையில் அதாவது அரசாங்கம் சிக்கன நடவடிக்கையை மேற்கொள்ளும் இவ்வேளையில் நாட்டிலுள்ள சகலருக்கும் முன்மாதிரியானதாகும்.

மேற்கண்டவாறு இலங்கை சுவதேசி இயக்கத்தின் பிரதான இயக்குனர் திரு ஜி பி காரியவாசம் பத்திரிகைக்கு வெளியிட்ட செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

விவாகத்தில் மணமக்கள் செல்வி தாம்பிகையும், செல்வன் அருளானந்தனும் உள்ளூரில் உற்பத்தி ஜவுளிகளையே அணிந்திருந்தனர், உடைமட்டுமன்றி விவாக நிகழ்ச்சிகளும் எளிமையாகவே நடைபெற்றன.

## கடல் அடியில் எண்ணெய் வளம்?

கோட்டை, செவ்.

இலங்கையைச் சுற்றியுள்ள கடலின் அடியில் எண்ணெய்வளம் இருப்பதாக கனிஜவள ஆராய்ச்சி அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

இதன் காரணமாக மன்னார் பிரதேசத்திலும் பாக்கு நீரிணையிலும் கடலின் அடியில் விஞ்ஞான ரீதியில் தோண்டி ஆராய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இவ்வாராய்ச்சிகளை இந்த ஆண்டிலேயே ஆரம்பிப்பதற்கு கனிஜவள ஆராய்ச்சிப் பகுதி முடிவுசெய்திருக்கின்றது. இதுசம்பந்தமான வேலைகளை இலங்கை பொறியியலாளர் ஸ்தாபனம் ஒன்றுடன் வெளிநாட்டு ஸ்தாபனமொன்றையும் ஈடுபடுத்த உத்தேசிக்கப்படுவதாகத் தெரிகின்றது. இப்பகுதிகளில் காணப்படும் எண்ணெயை பயன்படுத்தினால் சுமார் 8,00,000 டன் எண்ணெய் இலகுவாகக் கிடைப்பதாயிருக்குமென்று கருதப்படுகின்றது

## 'பத்திரிகையாளர் சமாதானத்துக்காக போராடவேண்டும்'

### சோவியத் தகவல் அதிகாரி யோசனை

யாழ்ப்பாணம், புதன்

சோவியத் நாட்டைப் பற்றி சரியான தகவல்களை மக்களுக்கு தெரிவிக்கவே செய்தித்தாள்களையும், சஞ்சிகைகளையும் தங்கள் தூதரகம் வெளியிடுவதற்குக் காரணம் என்று நேற்று 'ஈழநாடு' காரியாலயத்துக்கு விஜயம் செய்த சோவியத் தூதரக செய்தித்துறை அதிகாரி திரு ஐ. வி. சுச்கோவ் தெரிவித்தார்

யாழ்ப்பாணத்தில் பல இடங்களையும் போய் பார்த்ததாகவும் இங்கு மக்கள் விவசாயத்தில தீவிரமாக ஈடுபட்டிருப்பது தம்மை மிகவும் கவர்ந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் சோவியத் யூனியனைப் பற்றி தவறான கருத்துக்களை கொடுக்கும்பலதகவல்கள் கிடைக்கக்கூடியதாகவிருப்பதாகவும், எனவே இந்நாட்டு மக்களுக்கு சோவியத் யூனியனின் உண்மை சொருபத்தை விளக்கவேண்டியது அவசியமாகின்றது என்றும் அவர் சொன்னார்.

சோவியத் மக்கள் என்ன சொல்கிறார்கள் எதற்காகப் போராடுகிறார்கள் என்பதெல்லாம் மக்களுக்கு தெரிவிக்க வேண்டியவைகளாய் இருக்கின்றனவென்றும், இரு நாடுகளுக்குமிடையில் நட்புறவை பலப்படுத்த தாங்கள் முயல்வதாகவும் அவர் சொன்னார்

பத்திரிகையாளர்கள் எங்கிருந்தாலும் பொதுப் பிரச்சினைகளில் ஒன்றுபட வேண்டும் என்று குறிப்பிட்ட திரு. சுச்கோவ் உலக அமைதிக்காகவும், ஆயுதக் குறைப்புக்காகவும் ராணுவத்தளங்கள் அமைக்கப்படுவதை எதிர்த்துப் போராடவேண்டும் என்றும் கருத்து வெளியிட்டார்.

## 'வடபகுதி மின்சக்தி இணைப்பு தமிழரசின் முயற்சியாகும்'

—உடுவில் எட். பி

மாவிட்டபுரம், செவ்

இன்று இந்நாட்டில் நடைபெறும் ஆட்சியால் ஒரு சிலருக்கு தான் நன்மையேதவிர முழுத் தமிழருக்கும் நன்மை கிடையாது. நாம் அற்ப சொற்ப சலுகைகளுக்காக அடிபணியாது எமது மொழி கலை, கலாச்சாரம் ஆகியவற்றை அழிக்கும் செயலுக்கு இடங்கொடுக்காமல் நடக்கவேண்டும். ஆயிரம் ஆயிரம் பேரை சிறைக்கனுப்பினாலும் எம் உரிமைப் போராட்டத்தை தந்தையின் தலைமையில் நாம் நடாத்தி ஒருசுதந்திரமான தமிழ் இனத்தை உருவாக்குவோம் இதற்கு தமிழ் மக்கள் ஒரே அணியில் திரண்டு எமது இழந்த உரிமையைப்பெற உயிரைத்தியாகம் செய்யக்கூடதயாராக வேண்டும்"

இவ்வாறு சுரும்பசிட்டியில் நடந்த தமிழரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய கட்சியின் பொதுச் செயலாளர் திரு. ஏ. அமிர்தலிங்கம் கூறினார்.

(8-ம் பக்கம் பார்க்க)

**வெஸ்லி சினிமா** (மாவிட்டபுரம்)
தினசரி 3 காட்சிகள்
விஜயன் - ஜெயலலிதா
நடித்த
**ஸீ. ஐ. டி. - 116**
(புதிய தமிழ் வெளியீடு)

**ராணி சினிமா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜிகணேஷன் -சரோஜாதேவி
நடித்த
**அன்பளிப்பு**

**மனோகரா-** யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 10-30 மெற்னி



ராஜ்குமார் - ராதிகா - ஜோதிலட்சுமி
நடித்த
**ஜாக்பாட்டில் ஸி.ஐ.டி.999**

**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன் - சௌகார் ஜானகி
நடித்த
**சக்கரம்**

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (கொழும்பு) மைலன் (கொழும்பு)



சிவாஜி - காஞ்சனா
எம். என். நம்பியார்
நாகேஷ்
முத்துராமன்
இன்னும் பலர் நடித்த
**சிவந்த மண்**
(ஈஸ்ட்மன் வர்ணச் சித்திரம்)

கடைசி வாரம்
றீகல் 3-00, 6-00, 9 30
ஏ. வி. எம். ராஜன் வாணிஸ்ரீ சிவகுமார் நடித்த
**அன்னையும் பிதாவும்**


# ஓய்வு பெறும் ஆசிரியர்கள்

## பண்டித வித்துவான் ஆ. சின்னத்தம்பி

இவர் புன்னாலைக்கட்டுவன் வித்துவசிரோமணி சி. கணேசையாவின் மாணவன். பழமை தழுவிய புதுமையாளன். இவர் மதுரைப் பண்டிதர்; சென்னைப் பல்கலைக்கழக வித்துவான். அவற்றோடு பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியன். கொக்குவில் இந்துக்கல்லூரியிலும், உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையிலும் பல ஆண்டுகள் கல்வி பயற்றி மாணவர்களதும், ஆசிரியர்களதும் நன் மதிப்பைப் பெற்றவர். கடைசியாகத் தமது பிறந்த ஊரிலே வரணி மகா வித்தியாலயத்தில் 8 வருடங்கள் தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றி கடந்த ஆண்டுடன் ஓய்வு பெற்றார்.

இவர் சமூகத்துறையிலும் நல்ல சேவையாற்றியுள்ளார் வரணிக் கிராமசபையில் 9 வருடங்கள் தொடர்ந்து அங்கத்தவராக இருந்து மக்களின் பாராட்டுதலைப் பெற்றார். கூட்டுறவுப் பகுதியிலும் அயராது உழைத்து வருகிறார். வட வரணி சங்கத்தில் காரியதரிசியாகவும் கொடிகாம சமாசத் தலைவராகவும்சேவையாற்றி வருகின்றார்.

காலத்துக்குக்காலம் புத்தம் புதிய கருத்துள்ள பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டுள்ளார். அவை, பெண்மையின் பெருமை இராவணன் தமிழன், திராவிடர் என்ற பெயர்க் காரணம், யக்கர் நாகர் யார். ஈழநாட்டின் பூர்வம் என்பன. இவரிடத்து யாம்கண்ட ஒரு இலட்சியம் அஞ்சாத நேர்மையோடு குறைகளை எடுத்துப் பேசுவதில் சிறிதும் தயங்க மாட்டார்

க.க. ஐயாத்துரை

0 0 0

## திருமதி சின்னம்மா

துன்னாலை மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் ஆசிரியையாகப்பணிபுரிந்த திருமதி சின்னம்மா பொன்னுத்துரை தமது 57-வது வயதில் ஓய்வு பெற்றுள்ளார். இவர் கடந்த 36 ஆண்டுகளாக பண்ணாகம் மட்டுவில், அம்பாந்தோட்டை, வேருவலை, கண்டி. மீசாலை போன்ற இடங்களில் பணிபுரிந்துள்ளார். சிறந்த சமயத்தொண்டரும், பிரசங்கியுமான இவர் கண்டியில் பணிபுரிந்த காலத்தில் அங்கு ஒரு இந்து மாதர் கழகத்தை அமைத்து அதன்மூலம் சைவத்துக்குச் சேவைசெய்தார்' மாணவர்களிடம் நல்லாசிரியையாக மட்டுமல்லாது தாயாகவும் மிளிர்ந்தார்.

## ஓய்வு பெறுகிறார்

மட்டுவில், செவ் 36 ஆண்டுகளை பொலிஸ் சேவைக்கு அர்ப்பணித்து தற்போது கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இருப்பவருமான பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு தம்புகந்தையா இம்மாதம் தனது சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், புதன் சித்தன்கேணிச் சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் திருவெம்பாவை நாளில் நடைபெற்ற மணிவாசகர் விழாவில் வட்டுக் கிழக்குச் சித்தன்கேணித் திருமுறைக் கழகத்தினரால் சைவசமய சித்தாந்தவினாவிடை (விளக்கர்) என்னும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

பண்டிதர் த சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் நவாலி அட்டகிரிக் கந்தவேள் தேவஸ்தானம் பிரதிட்டா சிரோன்மணி பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் இந்நூலை வெளியிட்டுவைத்தார்.

நல்லைஞானசம்பந்தர் ஆதினம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் ஆசியுரை வழங்கி கழகத்தினரால் நடாத்தப்பட்ட திருமுறைப் போட்டிகளிற் பங்குபற்றிய மாணவர்களுக்குப் பரிசில்களையும் வழங்கினார்.

## நவீன சந்தை

அம்பன், செவ்வாய் ஆழிபுரத்தில் நவீனசந்தையொன்று விரைவில் ஸ்தாபிக்கப்படவிருப்பதாகவும், அதற்கான திட்டங்கள் தயார்செய்யப்பட்டு வருவதாகவும் குடத்தனைக் கிராம சபை முதல்வர் தெரிவித்தார்.

ஆழிபுரத்திற்கு செல்லும் பிரதான வீதி புனரமைப்பு செய்யப்படவிருப்பதாகவும் அதற்காக பல ஆயிரக்கணக்கான ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் கேள்விகள் விரைவில் அழைக்கப்படவிருப்பதாகவும் குடத்தனைக் கிராம சபைத் தலைவர் தெரிவித்தார்.

## 'திங்கள் ஏடு'

சுழிபுரம், செவ் தொல்புரம் வாலிபர் பூம்பொழில் திங்கள் ஏடு ஒன்றை பொங்கல் தினத்தன்று வெளியிட்டுள்ளனர். புலவர் நா. சிவபாதசுந்தரனின் ஆசியுரையுடன் வெளியாகியுள்ள பூம்பொழில் இதழில் கட்டுரைகள், கவிதைகள் கேள்விபதில் ஆகிய பகுதிகள் உள்ளன.

## நேரடியாக எடுக்க கோரிக்கை

வெள்ளவத்தை. செவ். யாழ். கனிட்ட தொழில் நுட்பக்கல்லூரியில் பகுதிநேர மோட்டார் மெக்கானிசம் பயின்ற மாணவர்களை வெரவெரவிலுள்ள இ. போ. ச. ஜெர்மன் பயிற்சிப் பாடசாலைக்குப் பரீட்சைகள் எதுவுமின்றி நேரடியாக எடுக்கும்படி கோரும் மகஜரொன்றை இலங்கைப் போக்குவரத்துச் சபைத் தலைவருக்கு கொழும்பில் உள்ள யாழ். கனிட்ட தொழில்நுட்பக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் அனுப்பிவைத்துள்ளது.

தொழில்நுட்பக் கல்விக்கு மதிப்பளிக்கும் இன்றைய அரசாங்கம் தனது அங்கீகாரத்தின் கீழ் தொழிற்பயிற்சி பெற்றுவரும் மாணவர்களுக்கு வாழ்வளிக்க உடனடியாக முன்வரவேண்டும் என்றும் அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது-


**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
ஜெய்சங்கர் - கே. ஆர் விஜயா நடித்த
**பெண்ணே நீ வாழ்க**

REGAL
Jaffna
Daily 4-45, 7 9-45 p. m.
Poya days 4 shows
Peter Sellers
in
THE PARTY
(Technicolor)


## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

1 மாதக் கோழிக்குஞ்சுகள், 1 1/2 மாதக் கோழிகள் (14) முட்டையிடும் நிலையில், விபரங்களுக்கு 68, ஆஸ்பத்திரிவீதி, கொட்டடிச் சந்தி, யாழ்ப்பாணம். 2664

பைசிக்கிள்:

B. S. A. லேடிஸ் பைசிக்கிள் (சிறியது) விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 30, பழம்ரோட், யாழ்ப்பாணம். 2447

EL 2500 சீரீஸ் இலக்கமுடைய சோமசெற் கார் நல்ல நிலையில் உடன் விற்பனைக் குண்டு. யோட்ச் யேசுரெட்ணம், (எலக்ரீஸன்) இராசாயனத் தொழிற்சாலை, பரந்தன். கிழமை நாட்களில் வேலைநேரங்களில் தொழிற்சாலையில் பார்வையிடலாம். 2652

### கல்வி

சிறுவர் வகுப்புக்கான விசேட பயிற்சிபெற்ற (First Class Trained) இளைப்பாறிய தலைமை ஆசிரியையின் நேரடியான மேற்பார்வையில் சிறுவர் பாடசாலை நடத்தப்பட்டு வருகிறது. சில வெற்றிடங்களே உள்ளன. விண்ணப்பிக்கவும். திருமதி. ஜி. எம். செல்லத்துரை. 45, பலாலி வீதி கந்தர்மடம். 2653

### தவறிவிட்டது

S 466847 இலக்கம் கொண்ட ஹரிநேசன் என்பவருடைய கூப்பன் நேற்று முன்தினம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 2667




## இடமாற்றங்கள்

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கச் செயலாளரும் ஆசிரியருமான திரு. எஸ். துரைசிங்கம் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியிலிருந்து கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு அடுத்தமாதம் முதல் திகதியிலிருந்து இடமாற்றம் செய்யப்பெற்றுள்ளார்.

0 0

வெள்ளவத்தை, செவ்வாய் கொழும்பு இறக்குமதிஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தில் கடமையாற்றிய திரு. கே. சந்தசாமி இம்மாதம் முதல் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார். இவர் தன்னாலையைச்சேர்ந்தவராவார்.

0 0

கொழும்பு டியூக் வீதி சேமிப்புப் பத்திரக் கிளையில் கடமையாற்றிய திரு கே விசுவலிங்கம் இம்மாதம் 2-ம் திகதிமுதல் இளைப்பாறியுள்ளார். இவரது இடத்திற்கு காசுக்கணக்கீட்டுக் கிளையைச் சேர்ந்த திரு க பேரம்பலம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# காமன்வெல்த் தலைவர்கள் இன்று இரகசியமாகக்கூடுகின்றனர்

## சாம்பியா திட்டம் பற்றி ஆராய்வர்

சிங்கப்பூர், ஜன. 19

காமன்வெல்த் தலைவர்கள் நாளையதினம் இரகசிய கூட்டமொன்றை நடத்தவிருக்கிறார்கள்.

காமன் வெல்த் நாடுகளுக்கான கோட்பாடுகள் பிரகடனம் சம்பந்தமாக சாம்பியா தயாரித்துள்ள திட்டம்பற்றி இந்த இரகசிய மாநாட்டில் ஆலோசிக்கப்படலாமென்று தெரிகின்றது. தென்னாபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதம் விற்பதற்கு முடிவு செய்யுமானால் என்ன செய்வது என்பது பற்றியும் இந்தக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என்று தெரிகின்றது.

காமன் வெல்த் பிரதமர்களின் மாநாட்டின் இன்றைய கூட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விருக்கும் என்று கருதப்படுகின்றது. தென்னாபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதம் விற்கவிருப்பது பற்றி இன்று விவாதம் ஆரம்பமாகவிருப்பதே இதற்குகாரணம்.

உலகப் பொருளாதார நிலைமைபற்றியவிவாதத்தை மாநாடு நேற்று முடித்துக் கொண்டது. இந்தவிவாதத்தில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. எட்வேர்ட் ஹீத்பேசிய போது காமன் வெல்த் நாடுகளுக்கு உதவும்விஷயத்தில் பிரிட்டன் தாராளக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றது என்றார். பொருள் கொள்வனவு விஷயத்தில் தேயிலையையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டதை அவர் ஏற்றுக் கொண்டார்.

இலங்கை பிரதமர் சமர்ப்பித்துள்ள இந்துசமுத்திரத்தை அமைதிப்பிரதேசமாக பிரகடனப்படுத்தும் ஆலோசனைகள் மீதும் சாம்பியாவின் காமன்வெல்த் பிரகடனம் சம்பந்தமாகவும் இனிமேல்தான் விவாதம் ஆரம்பமாகும்.

காஷ்மீரில்

## சதிக்கும்பல் பிடிபட்டது

புதுடில்லி, ஜன 1

ஜம்மு-காஷ்மீரில் நாசவேலைகளிலும் கொள்ளை கொலை முதலியவற்றிலும் ஈடுபட்டுவந்ததாகக் கருதப்படும் ஒரு கோஷ்டியை ராஜ்ய அரசு கண்டுபிடித்துள்ளது. இக்கோஷ்டியைச் சேர்ந்த 22 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

காஷ்மீர் தலைவர்களைக் கொலைசெய்யவும் அரச உடைமைகள் மீது தாக்குதல் நடத்தவும் ராஜியவிவகாரங்களில் தலையிடவும் இந்தக் கோஷ்டியினர் தீர்மானித்திருந்தார்கள்.

இக்கோஷ்டியின் தலைவரும் கைதாகியுள்ளார். இதில் சுமார் 200 பேர் வரை சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்றும் ஆனால் 30 பேர் மட்டுமே தீவிர பங்கு கொண்டுள்ளவர்கள் என்றும் சொல்லப்படுகின்றது.

இக்கோஷ்டியினரிடமிருந்து இரண்டு சுழல்துப்பாக்கிகள், இரண்டு கைத்துப்பாக்கிகள். கத்திகள், ஆயுதங்கள், 90 ஆயிரம் ரூபாய் ஆகியவற்றைப் பொலிசார் கைப்பற்றியிருக்கிறார்கள். பலத்த துப்பாக்கிச்சண்டையென்றின் பின்னர் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். ரகசிய தஸ்தாவேஜுகளின் போட்டோக்களும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்கள் ராஜ்யத்தில் பலகொள்ளைகளை நடத்தியுள்ளார்களா? இரண்டுவருடங்களாக இக்கோஷ்டி செயல்பட்டுவருகின்றதாம். இவர்களுக்கும் வாக்குக்கணிப்பு இயக்கத் தலைவர்களுக்கு மிடையில் நெருங்கிய தொடர்பு இருந்துவருவதாகவும் பொலிசார் கருதுகின்றனர்.

சோவியத் யூதர்கள்

## உலகக் கருத்தை திரட்ட இஸ்ரேல் முடிவு

டெல்அவிவ், ஜன. 19

சோவியத்நாட்டில்வாழும் யூதர்கள் இஸ்ரேலில் குடியேறுவதைத்தடுக்கும் சோவியத் நாட்டின் நடவடிக்கைகளுக்கு எதிராக உலக நாடுகளின் அபிப்பிராயத்தைத் திரட்ட வேண்டுமென்று இஸ்ரேல் மந்திரி சபைமுடிவுசெய்துள்ளது.

வெளிநாடுகளிலுள்ள சோவியத் உடமைகளுக்கும் அதிகாரிகளுக்கும் சேதம் விளைவிக்கும் சோவியத் விரோத நடவடிக்கைகளை இஸ்ரேல் மந்திரிசபை கண்டித்துள்ளது. சோவியத் யூனியனில் யூதர்களை விசாரிப்பதற்கு எதிரான உணர்வை தீவிரமாக்குவதற்குவேண்டியநடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென மந்திரிசபை தீர்மானித்துள்ளது.

இதற்கிடையில் நியுயோர்க்கிலுள்ள சோவியத் தூதரகத்திற்குமுன்பாகஅமெரிக்க யூதர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். பொலிசார் சிலரைக் கைது செய்தனர்.

— —

## இலங்கையில் மேற்கு ஜெர்மனி பிரமுகர்

கோட்டை, செவ்.

மேற்குஜெர்மனி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வில்லி பீற்றர் இலங்கைக்கு இருநாள் விஜயத்தை மேற்கொண்டுள்ளார். ஜனநாயக சோஷலிஷக் கட்சியின் முக்கிய பிரமுகர்களில் திரு. பீற்றர் ஒருவராகும்.

பதில் பிரதமர் மைத்திரிபால சேனநாயகா நிதி அமைச்சர் கலாநிதி என். எம். பெரேரா ஆகியோரைச் சந்தித்து மேற்கு ஜெர்மன் அரசாங்கத்தின் உதவித் திட்டம்பற்றி பேச விருப்பதாகத் தெரிவித்தார். கடந்த காலத்தில் மேற்குஜெர்மன் அரசு இலங்கைக்கு வழங்கிய உதவிகளைச் சுட்டிக்காட்டியதுடன் இலங்கையின் அபிவிருத்தியிலும் ஜனநாயக உரிமைகளைக் கட்டிக்காப்பதிலும், தனது அரசாங்கம் நாட்டம் கொண்டுள்ளதாக மேலும் அவர் தெரிவித்தார்.

## பிரான்ஸ் டெலிவிஷனில் இலங்கை பற்றிய படம்!

பாரீஸ், ஜன 19

இலங்கையைப்பற்றிய படமொன்று பிரான்ஸ் டெலிவிஷனில் போட்டுக்காட்டப்பட உள்ளது. பிரான்சிலுள்ள இலங்கை இராஜாங்கத் தூதுவர் திரு. திஸ விஜயரத்தினாவின் முயற்சியைத் தொடர்ந்து இலங்கையைப்பற்றிய படம் டெலிவிஷனில் இடம் பெற்றுள்ளது.

இப்படம் 45 நிமிடநேரம் காட்டப்படும் இப்படத்தைத் தயாரிக்க வரவிருக்கும் பிரான்சியத் தொழில் நுட்ப அறிஞர் குழுவுக்கு பிரசித்திபெற்ற டெலிவிஷன் படத் தயாரிப்பாளர் திருமதி மேட் டிலியனிரிகாட் தலைமை தாங்கி வருகின்றார்.

இலங்கையின் இயற்கை அழகு, கலாசார அம்சங்கள் ஆகியனவற்றைப் பிரதிபலிப்பதாக இந்த டெலிவிஷன் படம் அமையும். பிரான்ஸ் டெலிவிஷன்படப்பிடிப்பை நடாத்தும் குழுவிற்கு இலங்கை உல்லாசப் பிரயாணசபை அனுசரணையாக இருந்து சகல உதவிகளையும் கொடுக்கும். இலங்கையின் இயற்கை அழகு போன்றவற்றை இத்தகைய வழிகளில் பிறநாடுகளில் பிரசாரம் செய்வதின் மூலம் இலங்கையின் உல்லாசப்பிரயாணக் கைத்தொழில் விருத்தியடைய வழி ஏற்படும் என நம்பப்படுகின்றது.

—

## நகைப்பையுடன் வந்த நங்கையர்

சுழிபுரம், செவ்.

சுமார் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான தங்கநகைகளுடன் பையை பஸ் நிலையத்தில் தொங்கவைத்துவிட்டு கதைத்துக்கொண்டிருந்த யுவதிகள் பலத்த துரதிருஷ்டத்துக்கு ஆளானார்கள்.

திருமண வீடொன்றில் கலந்துகொள்ள இரு இளம் பெண்கள் அங்கு அணிந்து கொள்ள கொண்டுவந்த நகைகளை பையொன்றில் போட்டு பஸ்நிலையத்தில் தொங்கவைத்துவிட்டு அவர்களுடன் வந்த ஒரு வாலிபருடன் பேசிக்கொண்டிருந்தார்களாம். பஸ் புறப்படும் போது பையை மறந்துவிட்டு ஏறிச் சென்ற அவர்கள் இடையில் அது நினைவு வரவே பஸ்ஸை நிறுத்தி இறங்கி ஓடிவந்து பார்த்தனராம். பாவம்! பையை யாரோ அடித்துக் கொண்டு போய்விட்டார்கள். பொலிசில் புகார் சொல்லியும் பயனில்லை என்று தெரிகின்றது. திருமண வீட்டிலிருந்து திரும்பிச் செல்கையில் இது நடந்துள்ளது.

விமானவிபத்து

## 35 பேர் பலியாகினர்

சூரிச் சன 19

பல்கேரிய விமானம் ஒன்று இங்கு விழுந்துநொருங்கியதால்35 பேர்பலியானார்கள். இந்தவிமானம் 38 பேருடன் பாரிஸிலிருந்து சூரிச விமான நிலயம் நோக்கி வந்து கொண்டிருந்தது. விமானத்திலிருந்த 3 பேர் உயிர்தப்பி விட்டதாகத் தெரிகின்றது.

— —

## சேகுவேரா செல்வாக்கு பரவுகின்றது

பேராதனை, செவ்

பல்கலைக்கழகங்களில் சேகுவேரா இயக்கத்தின் செல்வாக்கு தீவிரமாகப் பரவி வருவதாகத் தெரிகின்றது. பேராதனை பல்கலைக்கழகத்திலும் சேகுவேரா இயக்கத்தினர் செல்வாக்கு வேகமாகப் பரவிவருகின்றது.

சமீபத்தில் நடைபெற்ற மாணவர் சங்கத் தேர்தல் கூட்டு முன்னணியினரின் பலம் குறைக்கப்பட்டு சேகுவேரா இயக்கத்தினர் செல்வாக்கு அதிகரிக்கப்பட்டுள்ளதைக் காட்டுவதாகக் கூறப்படுகின்றது.

— —

## சுதந்திரதின விழா

மட்டுவில் செவ்.

இந்த ஆண்டு சாவகச்சேரித் தொகுதியில் சுதந்திரதின விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதற்கான முயற்சிகளை செய்வதென தென்மராட்சிப் பகுதி காரியாதிகாரி திரு. ஆர். சிதம்பரப்பிள்ளை தலைமையில் சாவகச்சேரி றிபேர்க் கல்லூரியில் நடைபெற்ற ஒரு ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## மூன்று நெசவு நிலையங்கள்

கோட்டை, செவ்

பிறநாடுகளின் உதவியுடன் பாரிய நெசவுநிலையத்திட்டம் ஒன்றை தேசிய நெசவு கார்பரேஷன் அமுல் நடாத்த உள்ளது.

1000 லட்சம் ரூபா பெறுமதியான இத்திட்டத்திற்கு சீனு, போலந்து ஆகிய நாடுகள் உதவி அளிக்கும் என அறிய முடிகின்றது.

தென்மாகாணத்தில் ஒரு நெசவு நிலையமும் வடமத்திய மாகாணத்தில் மின்னேரியாவில் ஒரு நெசவுநிலையமும் தோம்பே தொகுதியில் ஒரு நெசவுநிலையமும் நிறுவப்படவுள்ளதாக தேசிய நெசவுக் கார்ப்பரேஷன் தலைவர் தெரிவித்துள்ளார்.

முதலாவது நெசவு நிலையம் தோம்பே தொகுதியில் அமைக்கப்படவுள்ளது இதற்கு சீனு உதவி அளிக்கும் எனத் தெரிய வருகின்றது.

## காலைச் சின்ன அப்பீல்மனு

விசாரணைக்கு உத்தரவு

புதுடில்லி, ஜன 18

இந்திய காங்கிரஸ் தேர்தல் சின்ன வழக்கு இந்திய சுப்ரீம் கோர்ட்டில் விசாரிக்கப்படவிருக்கின்றது. ஏர்பூட்டிய காளை மாட்டுச்சின்னத்தை ஜகஜீவன்ராம் தலைமைக்காங்கிரசுக்குதலைமைத் தேர்தல் கமிஷனர் கொடுத்ததை ஆட்சேபித்து நிஜலிங்கப்பா தலைமைக் காங்கிரஸ் காரியதரிசி திரு. சாதிக்அலி தாக்கல்செய்த மனுவை ஜே. சி. ஷா தலைமையிலான 5 நீதிபதிகள் ஏற்றுக் கொண்டு விசாரணைக்கு உத்தரவிட்டனர்

## தொடர்ந்து இருக்க யுதாண்ட் விரும்பவில்லை

நியுயோர்க், ஜன 19

ஐ. நா. தலைமைச் செயலாளர் யுதாண்ட் இப்பொழுது வகிக்கும் பதவிக்காலத்துக்குப் பின்னரும் அதில் தொடர்ந்து இருக்க விரும்பவில்லை. இதை அவரே நேற்று பத்திரிகை நிருபர்களிடம் கூறினார். வரும் வெள்ளியன்று 62 வயதையடையும் யுதாண்ட் இந்த ஆண்டு முடிவில் பதவியிலிருந்து ஓய்வுபெற விருக்கிறார்.

## விசேஷ பாதுகாப்பு

நியுயோர்க், ஜன 19

நியுயோர்க்கிலுள்ள சோவியத் தூதரகம்மற்றும் எல்லா தூதரகங்களுக்கும் விசேட காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நியுயோர்க் பொலிசார் வேலைநிறுத்தப் செய்வதை அடுத்தே இவ்விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வேலைநிறுத்தத்தின் முன்னர் பொலிசார் பாதுகாப்பளித்து வந்துள்ளனர்.

......

## இந்திராவுடன் போட்டி

புதுடில்லி. ஜன. 18

இந்தியப் பிரதமர் திருமதி காந்திக்கு எதிராக வரும் லோகசபைத் தேர்தலில் சம்யுக்த சோஷலிஸக்கட்சித்தலைவர் ராஜநாராயணன் போட்டியிடுவார் இவரை 4 கட்சி கூட்டணி தெரிவு செய்துள்ளது.

—

## காவோலை நோய்

கரைதீவு, செவ்

தீவுப்பகுதியில் வளர்ந்து வரும்பயிர்களுக்குகாவோலை நோய் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தீவுப்பகுதி விவசாயிகள் பெரும் கவலை கொண்டுள்ளனர். இந்த வருடமாவது சிறந்த அறுவடை செய்யலாம் என்று எதிர் பார்த்திருந்த விவசாயிகள் பெரும் ஏமாற்றத்துக்கு உள்ளாகி விட்டனர்.

— —

## கிறீஸ்தவ ஐக்கிய வாரம்

பண்டத்தரிப்பு, செவ்வாய்

இம்மாதம் 18ம் திகதியிலிருந்து 25-ம் திகதிவரை கிறீஸ்தவ சபைகளின் ஐக்கிய வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது. இதனையிட்டு இவ்வாரம் கத்தோலிக்க கிறீஸ்தவ ஆலயங்களில் விசேட ஆராதனை வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

மணிவாக்கு
அறத்தின் வழிநில், அஞ்சவேண்டாம். உன் இலட்சியமெல்லாம் உன் தேசத்தை - கடவுளை - உண்மையைப் பற்றியதாகவே இருக்கட்டும். — ஷேக்ஸ்பியர்.

ஈழநாடு

Telegram: "EELANADU" Jaffna
Post Box 49, Jaffna. Telephone: 889

சாதாரண ஆண்டு தை மாதம் 7-ம் திகதி (20-1-71)

## அரசியல் அமைப்பு அடிப்படைத் திர்மானங்கள்

அரசியல் விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா புதிய அரசியல் அமைப்பு நகல் திட்டத்தைத் தயாரித்து சமர்ப்பித்திருக்கிறார். அரசியல் அமைப்பு வழிகாட்டு விடயக் குழுவுக்கு அவர் சமர்ப்பித்திருக்கும் வரைவு அடிப்படைத் திர்மானங்களுக்குத் திருத்தம் கொண்டுவர விரும்பும் பொதுமக்கள் அவற்றைத் தமக்கு எழுதியனுப்பலாமென்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார். இவ்வித சந்தர்ப்பம் அளிக்க முன்வந்த அமைச்சர் பாராட்டுக்குரியவர்.

நாட்டின் சரித்திரத்தையே மாற்றியமைக்க விருப்பது புதிய அரசியல் அமைப்பு. இவ்விஷயத்தில் அவசரப்பட்டு முடிவுசெய்வதோ போதிய பெரும்பான்மைப் பலம் இருப்பதால் பிறருடைய கருத்துக்களை உதாசினம் செய்வதோ நாட்டுக்கும் நாட்டு மக்களின் எதிர்காலத்துக்கும் எவ்வித நன்மையும் கிடைக்காது போகலாம்.

நகல் அரசியல் அமைப்பு மிக நுணுக்கமாகப் பரிசீலனை செய்யப்படவேண்டும். இப்பொழுதுள்ள நம் நாட்டு அரசியல் அமைப்புத்தான் நம் நாடு முன்னேற முடியாமலிருப்பதற்கும் பல பல பிரச்னைகள் தோன்றுவதற்கும் மூலகாரணமென்பதைப் பலரும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். அன்றைய அரசியல் அமைப்பை உருவாக்குவதில் பெரும் பங்குகொண்டிருந்த சேர் ஐவர் ஜெனிங்ஸ் கூட பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் தாம் தவறு செய்துவிட்டதாக வருந்தினார். சிறுபான்மைத் தலைவர்கள் பலரும் அந்தச் சமயங்களில் தாங்கள் தவறுசெய்துவிட்டதாகப் பின்னர் கவலைப்பட்டனர். இந்தியாவில் அரசியல் திட்டத்தில் பதினெட்டுத் தடவைகள் திருத்தஞ்செய்யப்பட்டிருக்கின்றன. அங்கு அரசியல் அமைப்பை மாற்றியமைப்பதை முன்வைத்தே இப்பொழுது ஆளும் கட்சி தேர்தலில் இறங்கியிருக்கிறது.

கடந்தகால அனுபவங்களைக் கவனத்தில் கொண்டும் பிறநாடுகளின் நிகழ்ச்சிகளைக் கருத்தில்கொண்டும் புதிய அரசியல் அமைப்பின் அம்சங்கள் நன்கு பரிசீலனை செய்யப்படவேண்டும்.

அமைச்சர் சமர்ப்பித்துள்ள அடிப்படைத் திர்மானங்களில் அடிப்படை உரிமைகள் சம்பந்தமாகத் தெரிவிக்கப்பட்டுள்ள அம்சம் நன்கு ஆராயப்படவேண்டிய விஷயம்.

பௌத்தத்துக்கு முதலிடம் அளித்து அதை அரசு பேணிப் பாதுகாக்க வேண்டுமென்ற அம்சத்தை பௌத்த மக்கள் மட்டுமல்ல இதர மக்களும் நன்கு வரவேற்பர். இதில் யாரும் குறைசொல்வதற்கு இடமில்லை. ஆனால் இதர மதங்களுக்கு உரிமை வழங்கப்படும் என்ற உத்தரவாதம் மட்டும் போதுமா? இதர மதங்களுக்குப் பாதுகாப்புத் தேவையில்லையா என்ற கேள்வி எழுகின்றது.

பிரஜைகளுக்கிடையில் இன, மத அடிப்படையில் பாகுபாடு காட்டப்படலாகாது என்ற அம்சம் மொழி அடிப்படையில் என்ன நிலை என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது.

இந்த அடிப்படைத் திர்மானங்களை சிறுபான்மையினர் நன்கு பரிசீலனை செய்து அவற்றை எடுத்துக்காட்டி பெரும்பான்மையினரின் ஒத்துழைப்பையும் பெற்று இவற்றுக்குத் திருத்தம்கொண்டுவரவேண்டும்.

பலரும் பலவிதமான திருத்தங்கள் கொண்டுவராமல் சிறுபான்மையினரின் உரிமைகள் சம்பந்தமாக ஒரேவிதமான திருத்தங்களைக் கொண்டுவருவதில் தான் அதன் பயன் தங்கியிருக்கிறது.

இந்த நகல் திட்டம் பற்றி பிறிதொரு சந்தர்ப்பத்தில் விரிவாக ஆராய்வோம்.

## "கல்வி வளர்ச்சிக்கு ஒழுங்கு அத்திபாரம்"

பருத்தித்துறை, செவ்.

"கல்வி வளரவேண்டுமாயின் ஒழுங்கு, கட்டுப்பாடு, ஒழுக்கம் ஆகியன அவசியம். பொதுச்சொத்தைப்பேணும் பண்பு வளரவேண்டும். நாட்டுப்பற்று வளரவேண்டும். இவ்வித பண்புகளை இளம் உள்ளங்களில் வளர்ப்பதே ஆசிரியரின் தலையாயகடமையாக இருக்கவேண்டும்"

இவ்வாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற் பலகாலம் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு ஏ. சிவசாமிக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவுக்குத் தலைமைதாங்கிய மேற்படி வித்தியாலய அதிபர் திரு. க. சிவசிதம்பரம் கூறினார்.

தொடர்ந்து திரு. சிவசிதம்பரம் கூறியதாவது: "பாடங்களைப் போதிப்பது ஒருவிடயம், மாணவரைப் போதிப்பது வேறொன்று. மாணவரின் தரமறிந்து அவர்களுக்கு விளங்கக்கூடியமுறையில் போதிக்குந்திறமை ஆசிரியருக்குவேண்டும். எல்லாவற்றிலும் மேலாக, வகுப்பில் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டியது அவசியம்"

திரு சிவசாமியின் திறமை கடமையுணர்ச்சி பொறுமை ஆகிய பண்புகளைப்பாராட்டி உபஅதிபர் திரு ஏ சிவலிங்கம், ஆசிரியர்கள் திரு ஏ. தாமோதரம்பிள்ளை, திரு மு. வேலுப்பிள்ளை, எஸ். சின்னத்தம்பி ஆகியோர் பேசினர் பரிசில்களும் வழங்கப்பட்டன.

திரு சிவசாமி நன்றி தெரிவித்துப் பேசினார்.

## தலைவர் தெரிவு

கிளிநொச்சி, செவ்.

இம்மாதம் 17-ம் திகதி நடைபெறவிருந்த கரைச்சி கிராமசபைத் தலைவர் தெரிவு 23-ம் திகதிக்குப் பின்போடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# ஸ்ரீலங்கா குடிய[ரசு]

# பௌத்தத்திற்கு முதலிடம்: மற்றம்[...]

# சட்டங்கள் சிங்களத்தில், தமிழ்[...]

# தேசியசபையேஉயர் அதிகாரபீட[ம்]

இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்தப்படுவதற்கு புதிய குடியரசின் அரசியலமைப்புத் திட்டத்துக்கும் வழிவகுக்கும். 38 அடிப்படைத் திர்மானங்களை அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அரசியல் நிர்ணய சபையின் வழிகாட்டு விஷயாலோசனைக் குழுவுக்கு சமர்ப்பித்துள்ளார். அத்திர்மானங்களின் விபரம் இங்கு தரப்படுகின்றன.

0 பௌத்த மதத்துக்கு முதலிடம்: அதனை வளர்ப்பதும் பாதுகாப்பதும் அரசின் கடமை. இதர சமயங்களின் உரிமைகளுக்கு உறுதி.

0 அடிப்படை உரிமைகள் சுதந்திரங்கள்: சட்டத்தின் முன் எவரும் சமம் விரும்பும் சமயத்தை நம்பவும் வழிபடவும் உரிமை. பேச்சு கருத்து வெளியிட சுதந்திரம்.

0 தேசிய சபை: ஆயுள் ஆறு ஆண்டுகள். அதுவே அதி உயர்ந்த அதிகார பீடம்.

0 சட்டமாக்கல் மொழி: எல்லாச் சட்டங்களும் சிங்களத்தில், தமிழ்மொழி பெயர்ப்பும் இருக்கும்.

0 அரசகரும மொழி: சிங்களம், தமிழ்மொழி உபயோகம். 1958 மொழிச்சட்ட விசேட ஏற்பாடுகள் சட்டத்தின்படி.

### ஸ்ரீ லங்கா குடியரசு

1. ஸ்ரீலங்காசுதந்திரமான இறைமை கொண்ட தன்னுரிமைக்குரிய ஒரு குடியரசாதல் வேண்டும்.

2. ஸ்ரீ லங்கா குடியரசு ஒற்றையாட்சி அரசொன்றுதல் வேண்டும்.

### பௌத்தமதம்

3. ஸ்ரீ லங்காக் குடியரசிலே, பெரும்பான்மை மக்களின் சமயமாகிய பௌத்தமதம், அதற்குரிய இடம் வழங்கப்படல் வேண்டும். 5 (4) ஆம் அடிப்படைத் திர்மானத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை எல்லாச் சமயங்களுக்கும் உறுதியளிக்கும் அதே நேரத்தில் பௌத்த மதத்தைப் பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாதல் வேண்டும்.

அரசின் கொள்கை[...]
பற்றிய கோட்பாடுக[...]

4. சட்டங்களை ஆக்[...]
லும், ஸ்ரீ லங்காவை [...]
திலும் வழிகாட்ட வே[...]
யதும், ஆனால் எந்த [...]
மன்ற நடவடிக்கைகளு[...]
உட்படுத்தப்படலாகா[...]
மான அரசின் கொ[...]
கள் பற்றிய கோட்பா[...]
சார்பான பிரகடன[...]
அரசியலமைப்பு அட[...]
குத்தல் வேண்டும்.
கைய கோட்பாடுகளி[...]
கட்டனம் பின்வருவனவ[...]
உள்ளடக்கியிருத்தல் [...]
டும்:

(1) பின்[...]ம் குறி[...]
விகளையும் உள்ளடக்கி[...]
தரும ஜனநாயகமொ[...]
ஸ்ரீ லங்காவில் தாபித்[...]
முற்போக்கான மே[...]
டிலை முன்னேற்ற[...]
அரசியலமைப்பு உறுதி[...]
கிறது.

1. அந்த அந்த [...]
தொகுதிகளின் உரி[...]
உட்பட பிரஜை[...]
எல்லா உரிமைகளையு[...]
திரங்களையும் பூர[...]
அநுபவித்தல்;

2. வேலை செய்யும் [...]
தையடைந்துள்ள எ[...]
பிரஜைகளும் பூரண[...]
வேலை வாய்ப்புக்களை[...]
றுக் கொடுத்தல்;

3. முழு நாட்டினது[...]
தமான பிரிகுத்தி[...]
தல்;

4. பிர[...]ஜைகளி[...]
சமூக விளைவை, நி[...]
மான முறையில், [...]
செய்தல்;

5. மனிதனை மனித[...]
ண்டும் வழக்கத்துக்கு[...]
காணும் வகையில் [...]
பத்தி, பங்கீடு, மாற்று[...]
ஞம் மார்க்கங்களில் [...]
றவுச் சொத்து, [...]
குரிய சொத்துப் பே[...]
கூட்டுமுறைச் சொத்து[...]
அபிவிருத்தி செய்தல்[...]

6 மக்களது ஒழு[...]
பண்பு, கலாசார தரா[...]
என்பனவற்றை உயர்[...]
அத்துடன்,

7 நல்லதொரு வாழ்[...]
முறையை பின்பற்று[...]
காக, தனியாகவும்.
முறையிலும் மானிட[...]
மைகள் பூரணமாக ம[...]
படையும் வண்ணம். [...]
பத்தை ஒழுங்கமைத்[...]

(2) ஸ்ரீ லங்காவின் [...]
ஞதிகம், இறைமை, [...]
யம், பிரதேச முழுமை[...]
பவற்றை அரசு பாது[...]

# இலங்கையில் மின்சார அபிவிருத்தி

— ஸ். ராஜதேவா —

(யாழ். பிரதேச மின்சார பொறியியலாளர்

(முன் தொடர்ச்சி)

இந்நிலை செயல்படுத்தப்பட்டு 12.5 மெகவாட் மின்சக்தி உற்பத்தி செய்யப்பட்டது இதே நேரத்தில் 1956-ம் ஆண்டு கோட்டை மின்சார நிலையத்தில் உள்ள பழைய யந்திரங்கள் விற்கப்பட்டு 6 புதிய ஒவ்வொன்றும் 2 மெகவாட் சக்தி உற்பத்தி செய்யக்கூடிய புதிய மின்சக்தி உற்பத்தி யந்திரங்களை நிறுவினர். இதனால் 45 மெகவாட் மின்சக்தி அதிகரித்தது.

மேலும் மின்சக்தியின் தேவை அதிகரிக்கவே நீர் மின்சக்தித் திட்டத்தின் 2-வது நிலையின் பிரிவின்கீழ் வெல்லம்பிட்டியாவில்உள்ள பாவிக்க முடியாத 9 மெகவாட் உற்பத்தி ஸ்ரான்லி மின்சக்தி நிலையத்தை அகற்றி நீராவியுற்பத்திநிலையம் ஒன்றையமைக்க அரசாங்கம் தீர்மானித்தது. கிராண்பாஸிலுள்ள இந்த நீராவியுற்பத்தி நிலையம் களனிதிட்ட மின்சார நிலையம் என அழைக்கப்படுகிறது. 1962-ம் ஆண்டு இங்கினியாகலை மின்சக்தி நிலையமும் இணைக்கப்பட்டது.

நீர்மின்சக்தித் திட்டத்தின் 2-வது நிலையின் பிரிவில் நீராவி உற்பத்தி நிலையம் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து இதேபிரிவின் கீழ் நீர்மின்சக்தி உற்பத்தித் திட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. இதன்மூலம் நோட்டன்பிரிட்ஜில் நீர்மின் சக்தி நிலையம் அமைக்கப்பட்டு அதற்கு காலஞ்சென்ற திரு டி. ஜே. விமலசுரேந்திராவின் ஞாபகார்த்தமாக விமலசுரேந்திரா என்ற பெயர் சூட்டப்பட்டது. இத்திட்டங்கள் யாவும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இதேவேளையில் கல்லோயா அபிவிருத்திச் சபைக்கு கனடாவின் உதவி மேலும் கிடைத்தது. இதனால் இங்கினியாகல மின்சார நிலையத்தின் மின்சக்தி உற்பத்தி இருமடங்காக அதிகரித்தது. அவர்கள் உடவளவை திட்டத்தின்கீழ் உடவளவையில் நீர் மின்சக்தி நிலையமொன்றையும் நிறுவினர்.

### மஸ்கெலியா ஓயா திட்டம்

மின்சக்தியின் தேவை தொடர்ந்து அதிகரிக்கவே மஸ்கெலியாஓயாத் திட்டம் தீட்டப்பட்டது. இத்திட்டத்தின் பெயர் குறிப்பிட்டபடி இதில் மஸ்கெலியா ஓயாவின் (களனிகங்கையின் ஒரு கிளை) நீர் பயன்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் முதலாவது நிலை தற்போது பூர்த்தியாகியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மஸ்கெலியாவின் பழைய நகரம் இருந்த இடத்தில் ஒரு நீர்த்தேக்கம்கட்டப்பட்டது. கிற்றுல்கலவுக்கு அருகாமையில் பொல்பிட்டியா என்னுமிடத்தில் ஒரு புதிய நீர்மின்சக்தி நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இந்த மின்சார நிலையத்தோடு இணைக்கப்பட்டு உபமின்சக்தி விநியோக நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று சுன்னாகத்தில் நிறுவப்பட்டுள்ளது. சுன்னாகத்தில் நிறுவப்பட்டுள்ள இந்த உபமின்சக்தி நிலையத்தால் இன்று யாழ்ப்பாணம் தனக்குள் தேவையான மின்சாரம் முழுவதையும் பெறுகிறது. இதனால் யாழ்ப்பாணமும் தேசிய மின்சக்தி திட்டத்துடன் ஒன்றுபடுத்தப்பட்டுள்ளது.

### தேசிய திட்டத்துடன் யாழ்ப்பாணம்

இதுவரை காலமும்யாழ்ப்பாணத்து மின்சக்தி விநியோகம் தனிப்பட்ட ஒன்றாயிருந்தது. இலங்கையின் இதர பகுதிகளைப் போன்றே யாழ்ப்பாணத்திலும் மின்சக்தி உற்பத்தி சாதாரணமாக ஆரம்பிக்கப்பட்டது. 1930-ம் ஆண்டில் பருத்தித்துறையிலும் யாழ்நகரிலும் எண்ணெயில் இயங்கும் மின்உற்பத்தி யந்திரங்கள் இயங்கின. பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் மிகக் குறைந்த இடங்களுக்கு மின்சக்தியை வழங்கின. பின்னர் இலங்கையின் மற்றப் பாகங்களைபோன்றே 1950, 1951-ம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்திலும் மின்சக்தி உற்பத்தியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படவில்லை. பிற்பகுதியில் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை தனக்குத் தேவையான சக்தியை மின்சக்தி நிலையம் ஒன்றின்மூலம் உற்பத்தி செய்தது. தேவைக்குப் பயன்பட்டது போக எஞ்சிய மின்சக்தியை மின்சார இலாகாவுக்கு விற்பனை செய்தது. மின்சார இலாகா அம்மின்சக்தியை யாழ் மாநகரசபைக்கு திருப்பி விற்றது. 1958-ம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கை மின்சார இலாகா சுன்னாகத்தில் மத்திய மின்சக்தி நிலையத்தை நிறுவியது. இம்மின்சார நிலையத்தில் காலத்துக்குக் காலம் அதாவது 1965, 1966, 1967 ஆகிய ஆண்டுகளில் மின்சக்தி உற்பத்தி யந்திரங்களை நிறுவி இந்நிலையத்தின் மின்சக்தி உற்பத்தியை அதிகரித்துள்ளது. இக்குடாநாட்டில் காங்கேசன்துறை சிமெந்துத்தொழிற்சாலையே கூடிய மின்சக்தியைப் பெறுவதாகும். இத்தொழிற்சாலை தான் முதலில் நிறுவிய மின்சக்தி நிலையத்தை நீக்கிவிட்டு மின்சார இலாகாவிடமிருந்து

மின்சக்தியைப் பெ[...]
இத்தொழிற்சாலை 6 [...]
வாட்ஸ் சக்தியைப் [...]
கிறது. யாழ் குடாநா[...]
குத் தேவையான மின்[...]
11 மெகவாட்களா[...]
மின்சக்தி நிலைய[...]
இந்த முழுச்சக்தியை[...]
அளிக்க முடியவில்லை.
ஞலேயே அடிக்கடி [...]
குடாநாட்டில் மின்[...]
கோளாறுகள் ஏற்ப[...]
குடாநாட்டின் தொ[...]
களைப் பெரிதும் பாதி[...]
ளது. தற்போது [...]
குடாநாட்டின் மின்[...]
தேசிய மின்சார உற்[...]
யோடு இணைக்கப்ப[...]
ளது. இதனால் தற்[...]
ஏற்படும் மின்சக்தி[...]
கேடு யாழ் குடாநா[...]
வருங்காலத்தில் ஏற்ப[...]
என நாம் நம்பலாம்.

0 0

# ...டியரசு

# ...றம்தங்களுக்கும உரிமை

# ...மிழில் மொழிபெயர்ப்பு

# ...பீடம்

கொள்கைகள்
கோட்பாடுகள்

...ங்களை ஆக்குவதி
...லங்காவை ஆளுவ
...திகாட்ட வேண்டி
...ளுல் எந்த நீதி
...வடிக்கைகளுக்கும்
...த்தப்படலாகாது
...சின் கொள்கை
...கோட்பாடுகள்
...பிரகடனத்தை
...மைப்பு அடக்கியி
...வண்டும். அத்த
...ட்பாடுகளின் பிர
...ன்வடுவனவற்றை
...யிருத்தல் வேண்

...ஆம் குறிக்...
...உள்ளடக்கிய சம
...நாயகமொன்றை
...ல் தாபித்ததற்கு
...கான மேம்பாட்
...முன்னேற்றுவதற்கு
...மைப்பு உறுதியளிக்

அந்த மக்கள்
...ளின் உரிமைகள்
...பிரஜைகளின்
...ரிமைகளையு, சுதந்
...யும் பூரணமாக
...தல்;
...செய்யும் வய
...துள்ள எல்லாப்
...நம் பூரணமான
...ய்ப்புக்களை பெற
...த்தல்;
...நாட்டிலும் துரி
...விருத்தி செய்
...ளிடை...
...வை, நியாய
...றையில், பங்கீடு

...னை மனிதன் சுர
...க்கத்துக்கு முடிவு
...வகையில் உற்
...கீடு, மாற்று என்
...க்கங்களில் கூட்டு
...சாத்து, அரசுக்
...த்துப் போன்ற
...றச் சொத்துக்களை
...செய்தல்;
...னது ஒழுக்கப்
...லாசார தரங்கள்,
...ற்றை உயர்த்தல்,

...தொரு வாழ்க்கை
...பின்பற்றுவதற்
...யாகவும். கூட்டு
...ம் மானிடத்திற
...ரணமாக மலர்ச்சி
...வண்ணம். சமுதா
...முக்கமைத்தல்.
...லங்காவின் தன்
இறைமை, ஐக்கி
...தச முழுமை என்
...அரசு பாதுகாத்

...யைப் பெற்றது.
...ற்சாலை 6 மெக
...சக்தியைப் பெறு
...ரம் குடாநாட்டிற்
...வயான மின்சக்தி
...வாட்களாகும்.
...நிலையத்தால்
...முழுச்சக்தியையும்
...டியவில்லை. இக
...அடிக்கடி யாழ்
...டில் மின்சாரக்
...கள் ஏற்பட்டு
...டின் தொழில்
...ரிதும் பாதித்துள்
...தற்போது யாழ்
...டின் மின்சாரம்
...ன்சார உற்பத்தி
...இணைக்கப்பட்டுள்
...தலுல் தற்போது
...மின்சக்திச் சீர்
...ழ் குடாநாட்டில்
...த்தில் ஏற்படாது
...நம்பலாம்.
0

தல் வேண்டும்;

(3) இனச்சார்பானவும், சமயச் சார்பானவும், ஏனையவுமான தொகுதியினர், உட்பட ஸ்ரீலங்கா மக்களின் எல்லாப் பிரிவினரிடையேயும், ஒத்துழைப்பையும், பரஸ்பர நம்பிக்கையையும் வளர்ப்பதன்மூலம், தேசிய ஐக்கியத்தை வலுவூன்றச் செய்வதற்கு, அரசு முயலுதல் வேண்டும்

4 பொருளாதார சமூகரீதியான சிறப்புரிமைகளை நீக்கி ஒப்பின்மையையும் சுரண்டலையும் அகற்றி, எல்லாப்பிரஜைகளுக்கும் சமசந்தர்ப்ப வாய்ப்புக்களை அரசு உறுதி செய்ய முயலுதல் வேண்டும்

(5) தேசிய வாழ்வின்எல்லாத் தரங்களிலும். குடியியற் பரிபாலனம்நீதிபரிபாலனம் உட்பட அரசாங்கத்திலும், மக்கள் பங்குபெறச் சாத்தியமானஎல்லாசந்தர்ப்பங்களையும் அளிப்பதன் மூலம், மக்களது ஜனநாயக உரிமைகளையும், அரசாங்கத்தின் ஜனநாயக அமைப்பையும், அரசு உறுதிப்படுத்தி, விரிவாக்குதல் வேண்டும்.

(6) மக்களின் கலாச்சாரங்களையும், மொழிகளையும் அபிவிருத்திசெய்ய அரசு உதவி புரிதல் வேண்டும்.

[7] சமுதாயப்பாதுகாப்பு இன்னலம் என்பவற்றை உறுதிப்படுத்த அரசு முயலுதல் வேண்டும்.

(8) தமது சமயக்கோட்பாடுகளுக்கு ஏற்ப,ஒருவாழ்க்கை முறைமையைப் பின்பற்றிவருதல், எல்லாச் சமயங்களைச் சேர்ந்தவர்களுக்கும் இயக்கவதாயிருக்கும் வகையில், தேவையான பொருளாதார, சமுதாய சூழலை, அரசு அமைப்பதற்கு முயலுதல் வேண்டும்.

[9] சமாதானம், சர்வதேச ஒத்துழைப்பு என்பனவற்றை அரசு, விருத்திசெய்தல் வேண்டும்.

## அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும்

5 அரசியலமைப்பு அடிப்படையுரிமைகள் சுதந்திரங்கள் பற்றிய ஒரு பிரகடனத்தை அடக்கியிருத்தல் வேண்டும். அத்தகைய பிரகடனத்தில் பின்வரும் உரிமைகளும் சுதந்திரங்களும் அடங்கியிருத்தலும் வேண்டும்;-

1 சட்டத்தின்முன்பு மனிதர் எல்லாரும் சமமானவர்கள்; அத்துடன் அவர்கள் சட்டத்தின் மூலம் கிடைக்கும் சமமான பாதுகாப்புக்கும் உரிமையுடையவர்கள்.

2 சட்டத்தின் பிரகாரமாக அன்றி, எவரும் அவரது உயிரையோ, சுதந்திரத்தையோ, தனிப்பட்ட பாதுகாப்பினையோ இழத்தலாகாது.

3 சட்டத்தின் பிரகாரமாக அன்றி, பிரஜை எவரும் கைதுசெய்யப்படவோ கட்டுக்காவலில் வைக்கப்படவோ, சிறையில் இடப்படவோ,தடுத்து வைக்கப்படவோ கூடாது.

4 சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மத சுதந்திரம் என்பனசார்பான உரிமை ஒவ்வொரு பிரஜைகளுக்கும் இருத்தல்வேண்டும். தான் விரும்பும் சமயம் அல்லது நம்பிக்கையொன்றை உடையவராயிருத்தல் அல்லது மேற்கொள்ளுதல் சார்பான சுதந்திரமும், தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து, பகிரங்கமாகவேனும் அந்தரங்கமாகவேனும் தனது சமயத்தை அல்லது நம்பிக்கையை, வழிபாட்டிலும் அனுசரிப்பிலும், செயற்பாட்டிலும் போதிப்பதிலும் வெளிக்காட்டுதல் சாரபான சுதந்திரமும் இந்த உரிமையில் அடங்கும்.

5. ஒவ்வொரு பிரஜைக்கும், ஏனையவர்களுடன் சேர்ந்து தனது சொந்த கலாசாரத்தை அனுவிப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் உரிமையுண்டு.

6. அமைதிவாய்ந்த முறையிலே ஒன்று கூடுவதற்கும், ஒருங்கு சேர்வதற்குமான சுதந்திரம் சார்பான உரிமை எல்லாப் பிரஜைகளுக்குமுண்டு.

7 பேச்சுச் சுதந்திரம் வெளியிடுதல் உட்படக்கருத்துத் தெரிவித்தற் சுதந்திரம் என்பன சார்பான உரிமை ஒவ்வொரு பிரஜைக்கும் இருத்தல் வேண்டும்.

8, மத்திய அரசாங்க சேவை, உள்ளூர் ஆட்சிச் சேவை அரசாங்கக் கூட்டுத்தாபனச் சேவை என்பனவற்றிலும் இவை போன்ற பிற சேவைகளிலும் நியமனம் பெறுவதற்கு ஏனைய விதத்தில் தகைமை வாய்ந்த எந்தப் பிரஜைக்கும், இனம், சமயம், சாதி அல்லது பால் காரணமாக அத்தகைய நியமனம் தொடர்பில் வேறுபாடு காண்பிக்கப்படுதலாகாது; எனினும், அத்தகைய சேவைகளின் நன்மைக்கருதி குறிப்பிடப்பட்ட பதவிகள், அல்லதுபதவிவகைகள் ஆண்களுக்கு அல்லது பெண்களுக்கென ஒதுக்கப்படலாம்.

9 ஸ்ரீலங்காமுழுவதும்நடையின்றிப் பிரயாணஞ் செய்வதற்கும் தான் விரும்பும் இடத்தில் வசிப்பதற்குமான சுதந்திரம் ஒவ்வொரு பிரஜைக்கும் இருத்தல் வேண்டும்.

10. தேசிய ஐக்கியம் ஒருமைப்பாடு, தேசிய பாதுகாப்பு தேசிய பொருளாதாரம், பொதுசன இடரின்லா நிலை பொதுசன கட்டுப்பாடு பொதுசன சுகாதாரம் அல்லது ஒழுக்கப்பண்பின் பாதுகாவல், அல்லது மற்றவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாத்தல், என்பன சார்பான நலன்களை கருத்திற்கொண்டு சட்டத்தினுல் விதிக்கப்படும் மட்டுப்பாடுகளுக்கு அமைய அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்படும் அடிப்படையுரிமைகளையும் சுதந்திரங்களையும் பிரயோகித்தலும், செயற்படுத்தலும் இருத்தல் வேண்டும்.

## தேசிய சேவை

ஸ்ரீலங்கா மக்களின் இறைமை பராதீனப்படுத்தப்பட மாட்டாததாயிருத்தல் வேண்டும், அவ்விறைமை அவ்வப்போது பிரதேச அடிப்படையில் நடத்தப்படும் பொதுத் தேர்தல்களின்போது சர்வஜனவாக்குரிமையின் சுதந்திரமுள்ளதும் இரகசியமானதுமான பிரயோகத்தின் மூலம், நேரடியாக தேர்ந்தெடுக்கப்படும்தகைமைவாய்ந்தபிரதிநிதிகளடங்கிய தேசியசபை மூலம் செயற்படுத்தப்படும். இப்பொழுதுத் தேர்தலகளிலே சட்டரீதியாக தகைமையற்றவராக்கப் பட்டவர் தவிர்ந்த 18வயதுக்கு மேற்பட்ட வயதையுடைய எல்லாப் பிரஜைகளும் வாக்களிக்கும் தகுதி பெற்றவர் ஆகவும் தேர்தலிற் போட்டியிடும் தகுதியுடையவராகவும் இருத்தல் வேண்டும். தேர்தல் தொகுதி எல்லைகளை வரையறை செய்வது சார்பான கோட்பாடுகள் தற்போதையசட்டங்களுக்கு அமைவானவை யாயிருத்தல் வேண்டும் அரசியல் நிர்ணய சபை முதலாவது தேசிய சபையாகக் கருதப்படல் வேண்டும்.

7 எந்தத் தேசிய சபையும் அதன் முதல் கூட்டத் திகதியிலிருந்து ஆறு வருடங்களுக்கு மேல் பணியாற்றல் ஆகாது. எனினும், முதலாவது தேசியசபை அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர்களை அடக்கியதாயிருக்கவேண்டும் என்பதோடு அரசியல் நிர்ணய சபையினுல் புதிய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப் பட்ட திகதி முதல் ஆறு வருடகாலத்துக்கு தேசிய சபையாகப் பணியாற்றுதல் வேண்டும்

8. தேசிய சபை, அரச ஆற்றலின் மிகவுயர்ந்த கருவியாகத் திகழுதல்வேண்டும்.

9. சட்டமாக்கற் சபை ஒற்றை மன்ற அமைப்பு முறையினதாயிருத்தல்வேண்டும்.

10. தேசிய சபை, தனது மிகவுயர்ந்த சட்டமாக்கல் அதிகாரத்தை துறக்கவோ, கையளிக்கவோ, எந்த விதத்திலாவது பராதீனப்படுத்தவோ கூடாது; அல்லாமலும் அதே மாதிரியான, அதிகாரம் வாய்ந்ததும், அதனையொத்ததுமான சட்டமாக்கும் அதிகாரசபை ஒன்றை அமைத்தலுமாகாது; எனினும், விதிக்கப்பட்ட நோக்கங்களுக்காக, துணைச் சட்டவாக்கங்களைச் செய்வதற்கான அதிகாரத்தை, எந்த ஆளுக்கும் அல்லது சபைக்கும், தேசிய சபை சட்டத்தின் மூலம் அளிக்கலாம்.

## சட்டமாக்கல் மொழி

11. எல்லாச் சட்டங்களும் சிங்கள மொழியில் சட்டமாக்கப்படல்வேண்டும். அவ்வாறுசட்டமாக்கப்படும் ஒவ்வொரு சட்டத்தினதும் தமிழ் மொழிபெயர்ப்பும் இருத்தல்வேண்டும்.

## அரச கரும மொழி

12. (அ) ஸ்ரீலங்காவின் அரசகரும மொழி 1956ம் ஆண்டின் 33ம் இலக்க அரச கருமமொழிச் சட்டத்திலே. ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு, சிங்கள மொழியாதல்வேண்டும்.

(ஆ) தமிழ்மொழி பிரயோகப்படுத்தப்படல் 1958ம் ஆண்டின் 28ம் இலக்க தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற் கிணங்கவிருத்தல் வேண்டும்.

## நிதிக் கட்டுப்பாடு

13. அரசாங்க நிதியின்மீது தேசிய சபைக்கு பூரணமான கட்டுப்பாடிருத்தல் வேண்டும் தேசிய சபையினுல் நிறைவேற்றப்படும் சட்ட அதிகாரத்தின் பிரகாரம், அல்லது அதன் மூலமாக அல்லாது எந்தவிதமான வரி அல்லது வீதவரி அல்லது ஏனைய அறவீடுஎதுவும், எந்த உள்ளூராட்சிச் சபையினுலோ ஏனைய பகிரங்க அதிகாரியினுலோ விதிக்கப்படலாகாது.

## குடியரசின் ஜனதிபதி

14. குடியரசின் ஜனதிபதி ஒருவர் இருத்தல்வேண்டும். ஜனதிபதி அரசின் தலைவராகவும், ஆயுதம் தாங்கிய படைகளின் படைத்தலைவராகவு மிருத்தல்வேண்டும். ஜனதிபதி பிரதம அமைச்சரால் பெயர் குறிக்கப்படல் வேண்டும். அவர் விதிக்கப்பட்ட சத்தியப் பிரமாணத்தைச் செய்துகொண்டதும் ஜனதிபதியாவார். ஜனதிபதியின் பதவிக்காலம் அரசியலமைப்பில்விதிக்கப்படும்

15. அரசியல் அமைப்பில் வேறுவிதமாக ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் தவிர, ஜனதிபதி பிரதம அமைச்சரின் ஆலோசனையின் மீது செயலாற்றுதல் வேண்டும்.

## பிரதம அமைச்சரும் அமைச்சர் பேரவையும்

16. தேசிய சபையின் நம்பிக்கையை மிகவும் கூடுதலான அளவில் பெறுபவர் என ஜனதிபதி அபிப்பிராயப்படும் தேசிய சபை உறுப்பினரை, ஜனதிபதி பிரதம அமைச்சராக நியமித்தல் வேண்டும்.

17. தேசிய சபையின் உறுப்பினரிடையே இருந்து, அமைச்சர் பேரவையொன்றை ஜனதிபதி நியமித்தல்வேண்டும் இப்பேரவை ஒருசேர தேசியசபைக்குப் பதில்கூறக் கடமைப் பட்டதாயிருத்தல் வேண்டும். அதற்குப் பிரதம அமைச்சர் தலைவராதல் வேண்டும் பிரதம அமைச்சரின பதவி வெற்றுனதுடன் அமைச்சர் பேரவை கலைக்கப்பட்டதாகும்.

(தொடரும்)

---

தியாகராஜ ஜோற்சவம்

ஒரு 'காதோட்டம்'

# ஆணும் பெண்ணும் சேர்ந்து பாடலாமே!

மேனாட்டு அறிஞர்கள் பலர் தமிழியலில் ஆசை வைத்து அதை எவ்வளவு ஆர்வத்தோடு கற்று வருகிறார்களோ, அது போல சமீப காலங்களில் தமிழிசையான கர்நாடக சங்கீதத்திலும் பாண்டித்தியம் பெற்று வருகிறார்கள் என்பதற்கு அத்தாட்சியாக, திருவையாற்றில் நடந்த தியாகராஜ ஜோற்சவத்தில் சென்ற 16-ம் திகதி மாலை ஜோன் ஹிக்கின்ஸ் என்ற அமெரிக்கர் பிரமிக்கத்தக்க முறையில் ஸ்ருதி, லயம், தவறாது சமகாதி நயங்களோடும் கற்ப ஸ்வரத்தோடும் பாடியதைக்கேட்ட போது பெருமையாயும் மகிழ்ச்சியாயுமிருந்தது.

'தினமணி வம்ஸ' (ஆரிகாம்போதி), 'தனியுனிப்ரோவ' (பைரவி) போன்ற சௌக்ககால கீர்த்தனைகளையும் அழகாகப் பாடினார் ஜோன்!

மேனாட்டுப் பாடகர்கள் இருமல், செருமல், கனைப்பு முதலிய சேஷ்டைகளை மேடையில் செய்வதில்லை. அவை பண்புக் குறைவானவை என்று ரஸிகர்களால் கருதப்படும். ஜோன் ஹிக்கின்ஸ் நமது வித்வான்களோடு வருடக்கணக்கில் பழகியதால் போலும் தாராளமாகக் கனைத்தார் வயலிற்காரருக்கு 'சபாஷ் கூடப் போட்டார். நிச்சயமாக அங்கே சேஷ்டைகளும் செய்திருப்பாரென்றே நினைக்கிறேன். பூவோடு சேர்ந்த நாருக்கும் மணமுண்டு என்று சொல்வார்கள். இதுவும் அப்படித்தானு அல்லது மற்றப் பக்கமா!

காவேரி ஆற்றங்கரையிலுள்ள தியாகராஜ ஸமாதியில், தமக்கு வாழ்வும் வளனும் அளித்த மகனுபானருக்கு நன்றிக் காணிக்கை செலுத்த வந்த பல்லாயிரக்கான இசைக்கலைஞர்களினதும் ரஸிகப்பிரியர்களினதும் 'ஜே. ஜே' என்ற ஆரவாரம், வானெலி அஞ்சல் நிகழ்ச்சிகளுக்குப் பின்னணியாக ஓங்கார நாதமாய் ஒலித்துக் கொண்டிருந்தது.

அஞ்சல் ஏற்பாடுகள் யாவும் திருப்தியாயிருந்தன இசைவிழாக்களில் போலத்தான் இங்கேயும் திருவையாற்றுக்கு வரும் கலைஞர்கள் எவரோருக்கும் சபாதிக்கு முன்னுலிருந்து இசைக்கும் சந்தர்ப்பம் கிடைக்காது அப்படி சந்தர்ப்பம் கிடைத்தவர்கள் எல்லோரையும் அஞ்சல் செய்வது வானெலியால் முடியாத காரியம். ஏனென்றுல் இசைக் காணிக்கை இரவு பகல் தொடர்ச்சியாக நடத்துகொண்டேயிருக்கும். இருந்தாலும் திருச்சி வானெலியார் தங்களால் இயலக்கூடிய ஒழுங்குகளை செய்திருந்தார்கள். காலையிலும் மாலையிலும் ஏராளமான நாதஸ்வரக் கோஷ்டிகள் ஒவ்வொருவருக்கும் ஒரே ஒரு கீர்த்தனம் வாசிக்க நேரம் அளிக்கப்பட்டது. பலர் பயபக்தியோடு ஒரு குருவுக்கு செய்யவேண்டிய கடமையை பணிவுடன் செய்தார்கள். சிலர் ஏனோதானோ என்றும் வாசித்தார்கள். எல்லோரையும் பற்றி விமாசனம்செய்வதுமுடியாத காரியம். ஒருவர் வாசித்த உருப்படியை மற்றவர் வாசிக்காதபடி செய்தது வானெலி அஞ்சல் காரரின் சாமர்த்தியம். அப்பாடி, எத்தனை தியாகராஜ கீர்த்தனங்களைக் கேட்டோம்!

ஞாயிற்றுக்கிழமை இரவு திருவெண்காடு சுப்பிரமணியம்பிள்ளை நாகசுரம் வாசிப்பார் என்ற அறிவிப்பைக் கேட்டதும் துள்ளி உட்கார்த்து மகிழ்ச்சி அடைந்தேன. ஆனல் என்ன ஏமாற்றம்! ஹே! கலாதேவதே! கலைஞர்களுக்கு நரை, திரை, மூப்பு, பிணி என்பவை வராமல் தடுக்க மாட்டாயா?

இவருக்கு தவில் வாசித்தவர் சமீபத்தில் தான் தமது பிறப்பிடமாகிய யாழ்ப்பாணம் தக்கு வந்து திரும்பிய வலங்கைமான் சண்முகசுந்தரம் இவருடைய பெயர் அறிவிக்கப்பட்ட உடனேயே கூட்டத்தில் பெரிய 'அப்ளோஸ்'

16-ம் திகதி காலை ஆராதனை நடந்தது. வித்வான்கள் பஞ்சரத்தினக் கிருதிகளைப் பாடினர்கள் கூடவே சமாதியில் வேதபாராயணமும் நடந்ததென்பதை அஞ்சல் செய்தவர்கள் வடிவாக எடுத்துக் காண்பித்தார்கள். பாடும் வித்வான்களின் பெயரை மட்டும்ஒருநாளும் விளம்புகிருர்களில்லை. வெறுமனே இன்ன இன்னர் பாடுகிருர்கள் என்று அறிவிப்பதோடு நில்லாமல் திருவையாற்று நிகழ்ச்சிகளைப் பற்றிய சிறிய வர்ணனைகளை அடிக்கடி செய்து கொண்டிருந்தால் எவ்வளவு சிறப்பாயிருக்கும்]

நாகஸ்வர நிகழ்ச்சிகள் இரண்டு மூன்றில் யாழ்ப்பாணம் கே. ஜி, பாலசுப்பிரமணியம் தவில் என்று அறிவித்தார்கள் கணீரென்று வெண்கல நாதமான தவிலில் ரவை நறுக்குகள் அறுத்துக் கொட்டின. யார் இந்தபாலசுப்பிரமணியம்என்றுதெரிய ஆவலாயிருக்கிறது. பிரசாரம் படாடோபம், பட்டாஸ் வெடி ஒன்றுமில்லாமல் திரு

(8-ம் பக்கம் பார்க்க)

# ‘தைப்பொங்கல் தமிழனின் சோஷலிசப் பிரதிபலிப்பு’

**— உடுப்பிட்டி எம். பி**

பருத்தித்துறை, செவ்வாய்

‘தைப்பொங்கல் என்பது ஏழை விவசாயி தனது முயற்சியின் பிரதிபலனை அனுபவிக்கும் ஒரு புனித திருநாள். ஆண்டு முழுவதும் வியர்வை சிந்தி, இரத்தம் சிந்தி அறுவடையின் பின்னர் தனது மகிழ்ச்சியின் எதிரொலியாக, மனைவி மக்களுடன் இன்பம் பொங்க இருதயம் பூரிக்க, நாட்டு மக்கள் நல்வாழ்வு பெற கொண்டாடும் திருநாள். சோஷலிசம் என்ற கோட்பாடு தமிழனுக்குப் புதியதல்ல என்று உலகுக்கு அறிவிக்கும் பெருநாள்.’

இவ்வாறு உடுப்பிட்டி எம் பி. திரு. க. ஜெயக்கொடி பொங்கல் விழாவன்று நுணுவில் விநாயகர் ஆலயமுன்றலில் நடைபெற்ற பொங்கல் விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசும்போது குறிப்பிட்டார். தொடர்ந்து பேசிய ஜெயக்கொடி கூறியதாவது;

“சோஷலிசம் என்னும் புனித கோட்பாடு இன, மத, சாதி வேறுபாடுகளைத் தாண்டி, ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் வழிகாட்டி. தமிழ் மக்களைப் பொறுத்தளவில் வதப் பொங்கல் திருநாளே அப்புனித சோஷலிச பாதைக்கு மக்களை இட்டுச் செல்லக் கூடியதாக அமைகிறது.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி உட்படப் பலர் பேசினர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# தமிழர்களின் மொழிப்பற்றை மதிக்கின்றேம்

## பொங்கல் விழாவில் உதவி அமைச்சர்

கொழும்பு, செவ்.

வத்தளை தமிழ் பொது நல மன்றத்தின் முதல் ஆண்டு நிறைவு விழா பொங்கல் விழாவாக மிகச் சிறப்புடன் கெந்தளையில் உள்ள விஜயா ஸ்ருடியோவில் நடைபெற்றது.

மன்றத் தலைவர் திரு. க. செல்லையா கூட்டத்திற்குத் தலைமைதாங்கினர். அவர் தமது தலைமையுரையில் வத்தளை, கெந்தளை, குனுப்பிட்டி முதலிய பகுதிகளில் வாழும் தமிழ் மாணவர்களின் பள்ளிக்கூடப் பிரச்னையை விளக்கி அவர்கள் நன்கு பயில்வதற்கு ஏற்ற பள்ளிக்கூட வசதியைச் செய்துதரவேண்டும் என்று கூட்டத்திற்கு முதன்மை விருந்தினராக வருகை தந்திருந்த உதவிக்கல்வி அமைச்சர் திரு. பி. டை. துடாவைக்கு வேண்டுகோள் விடுத்தார்.

விழாவில் சிறப்புச்சொற்பொழிவாளராக கலந்து கொண்ட திரு. நாவேந்தன் பேசியதாவது:-

தைப்பொங்கல் விழாவின் சிறப்பினை எடுத்துக் கூறுகையில் தமிழரின் புத்தாண்டு தை முதலிலேயேதொடங்குகிறது. பல ஆயிரம் ஆண்டுகளாக இக்கணிப்பே கடைப்பிடித்து வரப்படுகிறது.

மாறுபடும் மதங்களினுலும் வேறுபடும் கொள்கைகளினுலும் கூறுபட்டிருக்கும் தமிழினத்தை ஒன்றுபடுத்தி ‘தமிழின உணர்வை’ ஏற்படுத்தும் விழாவாக பொங்கல்விழா விளங்குகிறது.

தமிழனின் நன்றி மறவாத நற்பண்பினை நானிலத்திற்குப் பறைசாற்றி நிற்கும் இவ்விழா உழைப்பால் உயர்ந்த தமிழன் தன் உழைப்பிற்குஉறுதுணையாய் விளங்கும் உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய இறைவனையும்- அந்தப் பேராற்றலின் ஓர் உருப்பாய் விளங்கி ஞாலத்தை வாழ்விக்கும் ஞாயிற்றினையும் வழிபட்டு நன்றி செலுத்தும் விழாவாகவும் இவ்விழா மலர்ந்துள்ளது

துணைக்கல்விஅமைச்சர் திரு. துடாவை பேசுகையில் தமிழர்கள் ஒன்றுகூடி தங்கள் சமுதாய நலனைப் பாதுகாத்தல் அவர்களுடைய தலையாய கடன் என்றும் அவ்விதம் பாதுகாக்காது விடுவதுதான் தவறு என்றும் கூறினர். இந்த அடிப்படையில் வத்தளை தமிழ்ப்பொது மன்றம் தமிழரின் நலனை-குறிப்பாக அவர்களின் கல்வி நலனைப் பாதுகாக்க எடுக்கும் முயற்சிக்கு தான் என்றும் ஆதரவளிப்பதாக உறுதி அளித்தார். வத்தளைப் பகுதியில் வாழும் தமிழ் மக்கள் ஒரு கல்லூரி கட்ட மூன்றில் ஒரு பங்கை வழங்க முன்வருவார்களாயின் மிகுதித் தொகையை அரசாங்கமே ஏற்று அக்கல்லூரியை நிறுவித்தரும் என பலத்த கைதட்டலுக்கிடையில் உறுதியளித்தார்

இலங்கையிலுள்ள இனப் பிரச்னைகள் மொழிப் பிரச்னைகள் அனைத்தும் ஒரு சோஷலிஸ சமுதாய அமைப்பில்தான் முற்றாகத் தீர்க்க முடியும் என்று தான் நம்புவதாகக் கூறினர். அத்துடன் இன மதம் கடந்த நிலையில் நாட்டு மக்கள் சிந்தித்து செயலாற்றினல் தான் நாடு முன்னேற முடியும். இந்த அரசாங்கம் சிங்களத்தை தமிழர் தலைமீது என்றும் திணிக்காது என்று கூறிய துடாவை தமிழர்களின் மொழிப்பற்றினையும் இனப்பற்றினையும் தாம் பெரிதும் மதிப்பதாகவும் கூறினர்

விழாவில் கலை நிகழ்ச்சிகளாக செல்வி மேனகாராணி சிவசம்புவின் நடனமும் தூய அந்தோனியார் மகாவித்தியாலயத்தில் ‘செழியன் துறவு’ என்ற நாடகமும், தூய அன்னம்மாள் மகாவித்தியாலயத்தின் ‘கர்ணன்’ என்ற நாடகமும் தமிழ்ப் பொதுமன்ற மாணவிகளின் கும்மியும் இடம்பெற்றன. இறுதி நிகழ்ச்சியாக ‘ராஜ் நகைச்சுவை’ நாடகமன்றத்தின் ‘சக்கடத்தார்’ நாடகம் இடம்பெற்றது

— —

இந்திய

# யோகிகள்பற்றி சோவியத் திரைப்படம்

மாஸ்கோ, ஜன 19

“இந்தியயோகிகள்: அவர்கள் யார்!” என்ற ஒரு ஜனரஞ்சகமான விஞ்ஞானத் திரைப்படத்தைத் தயாரிப்பதற்காக, சோவியத் தயாரிப்பாளர்கள் பலமாதங்கள் இந்தியாவில் கழித்தனர். முழு நீள வண்ணப்படமாக இதனை உருவாக்குபவர்கள் சண்டிகாரிலுள்ள யோகிகள் பயிற்சிக் கேந்திரத்திற்கும், யோக விஞ்ஞான ஆராய்ச்சித்துறைக்கும், பம்பாயிலுள்ள ஒருவைத்தியக்கூடத்திற்கும் விஜயம் செய்தனர்.

“அது ஒரு பரந்த சுகாதார அமைப்பு - உடலையும் உள்ளத்தையும் ஒழுங்கமைப்பதற்கான ஒரு முறை இந்திய மக்களின் ஞானமும் அவர்களது பார்வைப் புலனறிவும் அதில் காணக்கிடக்கின்றன தலைமுறை தலைமுறையாக இது கற்பிக்கப்பட்டு வந்துள்ளது” என்ற ஜவஹர்லால் நேருவின் வாசகத்தை இத்திரைப்படம் எடுத்துக் கூறுகிறது.

யோகப் பயிற்சி கற்கப்பட்டுவரும் பல்கேரியா, மாஸ்கோ, கீவ் ஆகிய இடங்களிலும் இதற்கான படப்பிடிப்பு நடைபெற்றது.

விரைவில் இத்திரைப்படம் சோவியத் யூனியனில் வெளியிடப்படும்.

# ‘அஞ்சலி’ வெளியீட்டு விழா

வெள்ளவத்தை, செவ்

‘எமதுநாட்டில் ஒவ்வொரு வருடமும் மாணவர்கள் ஆயிரக்கணக்கில் பெருகிக் கொண்டே போகிறார்கள். ஆனல் இவர்களின் வளர்ச்சிக்கு ஏற்ப இங்கே கலை, இலக்கியச் சஞ்சிகைகளோ பிற பத்திரிகைகளோ பெருகுவதாக இல்லை. முதன் முதலாக மிகவும் சிறப்பான அம்சங்களோடும் மிகுந்த செலவோடும் வண்ண ஓவியங்களோடும் ‘அஞ்சலி’ என்ற மாசிகை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எமது நாட்டின் சூழலை வைத்தே மிகவும் அருமையான கதைகளை எழுதலாம். கதையின் சூழலுக்குப் பொருத்தமாகப் படங்களும் அமைந்தால் அது சிறப்பை அதிகரிக்கும்.

இவ்வாறு திரு கி. இலட்சுமண ஐயர் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற ‘அஞ்சலி’ வெளியீட்டுவிழாவில் உரை நிகழ்த்துகையில் கூறினர்.

கட்டிடக்கலைஞர் திரு வி. எஸ். துரைராஜா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. இலட்சுமண ஐயர் தொடர்ந்து கூறியதாவது:- வாசகர்களுக்கும் எழுத்தாளர்களுக்குமிடையே ஒருவரையொருவர் புரிந்துகொள்ளும் பரஸ்பர உணர்வு வேண்டும்.

திரு. வி.எஸ். துரைராஜா பேசுகையில், ஐந்து லட்சம் தமிழர்களாவது எமது நாட்டின் கலை, இலக்கியச்சஞ்சிகைகளைப் படித்து எழுத்தாளர்களை ஊக்குவித்தால் நாம் பிறநாடுகளுடன் இலகிய பிச்சைகேட்கவேண்டிய அவசியமோ அவர்களது சஞ்சிகைகளை இங்கு தருவிக்கும்பண்போ இடம்பெற வேண்டியதில்லை’ என்றார்.

கொழும்பு பொது நூல் நிலையத்தைச்சேர்ந்த திரு. எஸ். எம். கமாலுத்தீன் பேசுகையில், ‘இலங்கையில் இதுவரை 17 சஞ்சிகைகள் இருப்பதாக அறிகிறேன். அஞ்சலியோடு இந்த எண்ணிக்கை 18 ஆகிறது’ என்றார்

செல்வி லீலா நாராயணனின் பரதநாட்டியக்கச்சேரியும் நடைபெற்றது. திரு கே எம். செல்வராஜா நன்றி கூறினர். திரு. கே. சி. தங்கராஜா விழாவை ஆரம்பித்து வைத்தார்.

— —

# இவர்களுக்கே முதலிடம்

பருத்தித்துறை, செவ்வாய்

படுத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, புலோலி ஆங்கில பாடசாலை ஆகியவற்றில் 8-ம் வகுப்புகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளமையால் அவ்வப்பகுதி மாணவருக்கே முதலிடம் கொடுக்கவேண்டுமென்றும், பிறமாணவரில் ஒருசிலர் மட்டும் திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்படலாமென்றும் பெற்ருர்கள் மேற்படி கல்லூரிகளின் அதிபர்களிடம் வலியுறுத்தியுள்ளதாகத் தெரிகிறது. ஏற்கனவே பல பாடசாலைகள் உள்ள கிராமங்களிலிருந்து மாணவரை எடுப்பது அநீதியானதென்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாகவும்தெரிகிறது

# ‘ஒற்றுமையே விளையாட்டுப் போட்டிகளின் குறிக்கோள்’

யாழ்ப்பாணம், புதன்

‘விளையாட்டுப் போட்டிகள், விளையாட்டுகள் நடைபெறுவது விளையாட்டிற்காகவே. இதில் ஒற்றுமையே முக்கிய குறிக்கோள், விளையாட்டுக் கழகங்கள் ஆரம்பிக்கப்படுவது நாட்டின் வளர்ச்சிக்கும், ஒற்றுமைக்கும் முக்கியஏதுவாக இருக்கின்றது. இப்படியான கழகங்களை வளர்ப்பது உங்கள் கையில்தான் உண்டு.’

இவ்வாறு காங்கேசன்துறைபட்டினசபை சபா மண்டபத்தில் தலைவர் திரு மு. கனகநாயகம் தலைமையில் நடைபெற்ற யங் ஸ்ரேயல் விளையாட்டுக்கழக அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசிய திரு செ. உலகப்பிரகாசம் கூறினர். அடுத்து கழகத்தின் உத்தியோகத்தவர்கள் தெரிவு நடைபெற்றது.

கழகத்தின் போஷகராக திரு. க. ஜெயபாலசிங்கம் தெரிவு செய்யப்பட்டார். உபபோஷகர்களாக திருவாளர்கள் க பரம்சோதி ஆசிரியர், இ குருசாமி பட்டினசபைஉறுப்பினர். சு. கிருபாமூர்த்தி முன்னள் பட்டினசபைத் தலைவர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். கழகத்தின் தலைவராக திரு ஜே வை மரியதாசனும் உபதலைவர்களாக திருவாளர்கள் மு கனகநாயகம், சு நீதிரஞ்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். கழகத்தின் காரியதரிசியாக திரு கெ பதமநாதனும் தனதிகாரியாக திரு க கனபாலசிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

அடுத்து விளையாட்டுப் பகுதி உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெற்றது இதில் உதைபந்தாட்ட 1ம் பிரிவு கோஷ்டி தலைவராக திரு சோ யோகராசாவும் 2ம் பிரிவு கோஷ்டி தலைவராக திரு றி குற்ருலநாதனும் தெரிவு செய்யப்பட்டனர். கைபந்தாட்டத் தலைவராகதிரு மாட்டின் தெரிவு செய்யப்பட்டார் கிரிக்கெட் கோஷ்டி 1ம் பிரிவு கப்டனை திரு யோ கிருபைநாதனும், 2ம் பிரிவு கிரிக்கெட்கோஷ்டி கப்டனாக திரு டொமினிக் அமிர்றுதெரிவும்செய்யப்பட்டனர். விளையாட்டுப் பகுதிக் காரியதரிசியாக திரு மு அருமைநாயகம் தெரிவு செய்யப்பட்டார். யங் ஸ்ரேயல் விளையாட்டுக் கழகத்தின் நிர்வாக பிரிவிற்கு ஐவர் கொண்ட காரியக் கமிட்டியும் நிறுவப்பட்டது கழகத்தினர் ஓர் உதைபந்தாட்டப்போட்டி நடத்துவதென்றதீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# “அகில இலங்கை ரீதியில் இசைவிழாநடாத்தவேண்டும்”

மானிப்பாய், செவ்.

இந்தியாவில்தமிழ் இசைச் சங்கம், மியூசிக் அகடமி முதலிய இசை மன்றங்கள் ஆண்டுதோறும் மார்கழி மாதத்தில் இசைவிழாக்களை சிறப்பாக நடாத்தி வருவது போல் இலங்கைக்கழகதமிழ் இசைச்சபையும் அகில இலங்கை ரீதியில் ஆண்டுதோறும் தொடர்ந்து சில தினங்களுக்கு இசைவிழாவினை நடாத்தவேண்டும்.

இவ்வாறு இலங்கைக்கலைக் கழகத்தின் தமிழ் இசைச் சபையின் உறுப்பினரில் ஒருவரான தவில் வித்துவான் குபேரலயஞானபூபதி தெட்சணமூர்த்திஇவ்வாண்டுஇசை வளர்ச்சியில் எவ்வாறு இயங்கலாம் என்பதுபற்றி திட்டம் தீட்டுவதற்காகக் கூட்டும் கூட்டத்திற்கு நீண்ட காலத்திட்டம்பற்றி எழுத்து மூலம் தனது கருத்தைத் தெரிவித்துள்ளார்.

வருடந்தோறும் இங்கு நடாத்தும் இவ்விழாவில் சிறந்த இந்திய வித்துவான்களும், ஈழத்தின் சிறந்த வித்துவான்களும் ஒருங்கு சேர்ந்து இசை நிகழ்ச்சிகள் அளிக்க ஒழுங்கு செய்ய வேண்டும்எனமேலும் அவர் குறிப்பிட்டுள்ளார் இவ்விசைநிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் விசேட நிகழ்ச்சிகளாக கூடுதலானநேரத்தை ஒதுக்கி அஞ்சல் செய்ய வேண்டும். இதன் மூலம் இருநாடுகளுக்குமிடையே கலை நேச மனப்பான்மை பெருகவும், எமது வித்துவான்கள் புதிய அனுபவங்களைப் பெறவும் வாய்ப்பு ஏற்படும் என மேலும் கருத்துத் தெரிவித்துள்ள வித்வான் தெட்சணமூர்த்தி எமது நாட்டில் இலைமறை காய் போல் இருக்கும் வித்துவான்களின் திறமைகளை பலர் அறியவும் மக்கள் இக்கலையில் அதிகஈடுபாடுகொள்ளவும் இவ்விழா பெரிதும் பயன்படும் என்று வலியுறுத்தியுள்ளார்.

# ‘சமூகங்களுக்கிடையே புதிய மறுமலர்ச்சி’

உடுப்பிட்டி, செவ்

“நாட்டில் சமூகங்களுக்கிடையே புதிய மறுமலர்ச்சி தோன்றிவருகின்றது. இத்தருணத்தில் எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வில் நாம் அதிக கவனஞ் செலுத்தவேண்டியவர்களாக உள்ளோம். ஆதலினல் சிறுபிள்ளைகளை இளம்பராயத்திலிருந்தே நல்ல பழக்கமுள்ளவர்களாக வளர்க்க வேண்டும். இல்லாவிடில் பெற்றேர் தமது பிள்ளைகளுக்கு எதிர்காலத்தில் தீங்கு செய்தவர்களாகிவிடுவர்.

இவ்வாறுதுன்னலைதெற்கு தயாநிதி சமூகசேவாசங்க அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு தலைமைவகித்துப் பேசுகையில் சமாதானநீதிபதி திரு ஆனகுலேந்திரம் குறிப்பிட்டார்.

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை நிர்வாகக் காரியதரிசி திரு சி. செல்லையா பேசுகையில் [பின்தங்கிய சமூகங்களின் முன்னேற்றத்திற்கு இத்தகைய சமூகசேவா சங்கங்கள பெரும் பணிபுரிகின்றன. ஒருசமூகம் முன்னேற வேண்டுமானல் கல்வி முன்னேற்றம்மூலம்தான்குறித்த வெற்றியைப்பெறமுடியும்” என்று குறிப்பிட்டார்

திரு பீ தவயோகமும் பேசினர்.

......

# இடமாற்றம்

சுழிபுரம், செவ்.

வலிகாமம் மேற்கு பகுதி காரியாதிகாரியாக கடமையாற்றிவந்த மாணிக்க நடராசா இம்மாதம் முதல் யாழ்ப்பாணப் பகுதி காரியாதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவருடைய இடத்துக்கு யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய திரு. எஸ். நடராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

# கலையரசுக்குப்பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்

'ஈழத்தில் நாடகமும் நானும் என்ற நூலுக்கு சாகித்திய மண்டலப் பரிசில் பெற்ற கலையரசு சொர்ண லிங்கத்தைப் பாராட்டுமுகமாக ஒரு தேனீர் விருந்து குடும்பபிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் சன்மார்க்க நாடக மன்றத் தலைவர் திரு. ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்றது. வரவேற்புரை கூறிய இரசிகமணி கனக செந்திநாதன் கலைஞர்கள், எழுத்தாளர்கள் அனுபவம் வாய்ந்த அரசியல் வாதிகள் தங்கள் வாழ்க்கை அநுபவங்களை நூலுருவில் கொண்டு வரத்தவறுகிறார்கள் என்றும், ஆனால் கலையரசு தமது அநுபவங்களை அடக்கிய நூலை நமக்கு தந்துள்ளார் என்றும் இது ஒரு முன்மாதிரிஆன விஷயமென்றும் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக தமிழ் பேராசிரியர் அனுப்பிய வாழ்த்துச் செய்தி படிக்கப்பட்டது' திரு. த. சண்முகசுந்தரம், திரு. க. சொக்கன், திரு. செ. கதிரேச பிள்ளை, திரு சுந்தரமூர்த்தி, திரு. வ. தனேஸ்வரன், திரு. பொ செல்வரத்தினம் உட்பட பல கலைஞர்கள் பாராட்டுரை வழங்கினர்

கலையரசு நன்றி தெரிவித்துப் பேசும் போது எமக்கென்றொரு சக்தி இல்லை என்றும் எல்லாம் எம்மையெல்லாம் ஆட்டுவிக்கும் இறைவன் தந்த சக்திதான் என்றும் குறிப்பிட்டார் சன்மார்க்க சபையினர் தமக்கு தேநீர் விருந்து அளித்து கௌரவித்தமைக்கு நன்றி தெரிவித்தார். க. செல்லையா ஆசிரியர் நன்றி கூறினார்.

கலையரசுவின் பெயரால் வடமாகாணத்தில் நாடகச் சுற்றுப் போட்டி ஒன்று நடாத்துதல் வேண்டும் என்றும் அதற்கு கலைஞர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்றும் தலைமையுரையில் ஏ. ரி. பொன்னுத்துரை குறிப்பிட்டார். (குவிம)

"நினைவு முத்திரை வெளியிட்டு

# மலையக உழைப்பாளிகளை கௌரவிக்க வேண்டும்"

நாவலப்பிட்டி, செவ்

'ஆண்டுதோறும் அரும்பாடுபட்டுழைக்கும் உழைப்பாளி, அவ்வுழைப்பின்பெருமையையும் பயனையும், சிறப்பையும் கொண்டாட அதற்கென ஒருநாளை ஒதுக்கிய பெருமை தமிழர்களுக்கே உண்டு. உழைபபாளர்கள் திருநாளே தைத்திருநாள் என மிகப் பழங்காலம் தொட்டு தமிழர்கள் கொண்டாடி வருகின்றனர். ஒரு நாடு செல்வச் செழிப்புடன் திகழ்வதற்கு அந்நாட்டின் உழைப்பாளிகளே காரணகர்த்தர். இலங்கை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முதுகெலும்பு போன்றிருப்பவர்கள் மலையகத்தில் வாழும் 12 லட்சம் தொழிலாளர்களே இவ்வுழைப்பாளிகளுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிப்பதற்கு நினைவு முத்திரை ஒன்றை வெளியிட்டு கௌரவிக்க வேண்டும். இதற்கு மக்கள் அரசாங்கம் முன்வரவேண்டும்'

வ்வாறு ரேசல்ல இளைஞர் முன்னேற்ற மன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற உழைப்பாளர் பெருவிழாவை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்துப் பேசிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை உதவிச் செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன் குறிப்பிட்டார்.

இவ் விழாவிற்கு மலையகப் பேரவையைச் சேர்ந்த திரு. பி. எம். லிங்கம் தலைமை வகித்தார்.

மன்றக் குழுவினரால் உழைப்பாளர் கீதம் இசைக்கப்பட்டது.

திரு செ. நேசன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

திரு. குறிஞ்சில் மனோகரன், திரு. இள நாகலிங்கம், திரு. பி எல் பெயரைய்யா மற்றும் பலர் பேசினார்கள் திரு. செ. வி. நாதன் நன்றியுரை கூறினர். 'ஒரு பிடி மண்' என்னும் சரித்திர நாடகம் இடம் பெற்றது.

## நஷ்ட அபாயம்

வேலணை, செவ்

வேலணைப்பகுதியில் புகையிலைக்கு ஒருவகை நோய் ஏற்பட்டுள்ளது.

கடந்தவருடம் புகையிலை யின்விலைவீழ்ச்சியாலும், விற்பனையில் ஏற்பட்டதாமதத்தினாலும்பாதிக்கப்பட்டவிவசாயிகளுக்கு இவ்வருடபுகையிலைச் செய்கையிலும் நஷ்டம் ஏற்படும் அபாயம் எதிர்நோக்கியுள்ளது.

புகையிலைச் செடிகளில் இலைச்சுருள் போன்ற நோய் ஏற்பட்டுள்ளது. மருந்துகளுக்கும் இந்நோய் கட்டுப்படுவதாக இல்லை என கூறப்படுகிறது.

20ஆயிரம்ரூபாய்

## கதிரைகளை பொலிசார் மீட்டனர்

காலி, செவ்

கல்யாணவீட்டில் இருநூறு அலுமினியம் கதிரைகளைத் திருடியகோஷ்டி ஒன்றைப் பொலிசார் சுற்றிவளைத்துப் பிடித்துக் கொண்டனர்.

கொழும்பு ஜம்பட்டாவீதியில் நடைபெற்ற மேற்படி திருட்டில் சம்பந்தப்பட்ட திருடர் கோஷ்டியைபொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு. கிறேஸியன் குணவர்த்தன, சப்இன்ஸ்பெக்டர் திரு டி ஐயகுமாரன் ஆகியவர் தலைமையில் சென்றபொலிசார்15ந்திகதி இரவு காலியைச் சேர்ந்த காடகன்டா என்னுமிடத்தில்பிடித்தனர்.

மேற்படி 200 கதிரைகளின் பெறுமதி 20 ஆயிரம் ரூபாவாகும்.

இத்திருட்டை கண்டுபிடிப்பவர்களுக்கு2000ரூபாவெகுமதிதருவதாக தளபாடச் சொந்தக்காரர்கள் தெரிவித்திருந்தனர்.

தமக்குக்கிடைத்த இரகசிய செய்தியின்படி பொலிசார் கதிரைகளிருந்த வீட்டைச் சோதனையிட்டுத் திருட்டுப்பொருட்களை மீட்டனர். சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். திருட்டுப் பொருட்கள் புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில சேர்க்கப்பட்டுள்ளன.

## பொன் விழா

பண்டத்தரிப்பு, செவ்வாய்

யாழ மேற்றிராசனத்தின் பல்வேறு இடங்களிலும் திருத்தொண்டாற்றிய அம்லோற்பவசபையைச் சேர்ந்த வண. சார்ள்ஸ் நவரத்தினம், வண. என் சோசப்பு வண. வில்லியம் யேசுதாசன், வண பி பீற்றர் ஆகிய 4 குருக்கள் இம்மாதம் 25-ம் திகதி தமது சந்நியாசஅந்தஸ்த்தின் பொன் விழாவைக் கண்டுகளிக்கின்றனர்.

## மார்ச் 19-ல் விசாரணை

கொழும்பு, செவ்

பருத்தித்துறைத் தொகுதி தேர்தல் ஆட்சேபனைவழக்கு மார்ச் மாதம் 19-ந் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

## விசேட சபைகள்

கோட்டை, திங்கள்

அரசாங்கத்தினதும் தனியார்களதும் கைத்தொழில் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கு விசேடசபைகள் அமைக்கப்படவுள்ளன

இச்சபைகளின் மூலம் ஒருங்குமுனை செயல்முறை வழிப் படுத்தப்படவுள்ளது

## புதிய நிர்வாகிகள்

சாய்ந்தமருது, செவ்வாய்

மட்டக்களப்பு கலைக்கழகத்தின் புதுவருட நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர்: திரு பண்டிதர் வி. ஸி' கந்தையா உபதலைவர்கள்: திருவாளர்கள்: அப்துல்காதர் டாக்டர் வி சிவலிங்கம் டாக்டர் எம் பரசுராமன் செயலாளர்: திரு ஈ நாகலிங்கம் உபசெயலாளர்கள்: திருவாளர்கள்: கே சிவப்பிரகாசம் ஸி மௌனகுரு கே மகேஸ்வரலிங்கம் ஈ தர்மலிங்கம் பொருளாளர்: ஐ ஞ ப் ஹாபிஸ் எம் கே செய்யது கமது உபபொருளாலர்: திரு தில்லை மகாலிங்கம் கணக்குப்பரிசோதகர்: திரு பி சங்கரவேல் திரு எ தங்கத்துரை.

0 0 0

சுழிபுரம், செவ்வாய்

சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூகநிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலைய வாசிகசாலை மண்டபத்தில் நடைபெற்றது. கூட்ட அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: க இராசபா சம் உபதலைவர்: மா மகாதேவன் செயலாளர்: மு தம்பிஐயா உபசெயலாளர்: ச சிவசண்முகமூர்த்தி தனாதிகாரி: மா சோமசுந்தரம், பத்திராதிபர்: மா அழகேந்திரன் பரிசோதகர்: சி கந்தசாமி போஷகர்கள்: சு கந்தசாமி இ சதாசிவம் நிர்வாக சபை உறுப்பினர்: சி அப்புத்துரை க ஆறுமுகம் சு இராமலிங்கம். ஆ ஏரம்பு

0 0 0

யாழ்ப்பாணம், புதன்

கொட்டடி முத்தமிழ் சனசமூக நிலைய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரியப்பட்டனர்:

தலைவர்: மா புலேந்திரன் உபதலைவர்: சி மயில்வாகனம், காரியதரிசி: த. செந்தில்ராஜா உபகாரியதரிசி: இ. தவராசா, தனாதிகாரி: கு கனகலிங்கம் செயற்குழு அங்கத்தவர்கள்: சி புஷ்பராசா, வே பழனி மு அருமைநாயகம் சி பாலசிங்கம் கு அரயரத்தினம் செ முத்துராசா.

0 0 0

சுழிபுரம், செவ்வாய்

சங்கானை மேற்குசனசமூக நிலையத்தின் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகக் கீழ்க் காண்போர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

தலைவர்; செ தருமதுரை உபதலைவர் க. குமாரசாமி காரியதரிசி- தி. சிவானந்தன்- உபகாரியதரிசி வ சடாச்சரம் தனாதிகாரி பொ கேதீஸ்வரன். உபதனாதிகாரி கே. பரஞ்சோதி நிலையப் பொறுப்பாளர் ந கருணாகரன் விளையாட்டுப்பொறுப்பாளர் கோ. பாலச்சந்திரன் பத்திராதிபர்: பொ. விக்கினேஸ்வரன் கணக்குப்பரிசோதகர் வீ. சிவபாலசிங்கம் 6 பேர்கொண்ட நிர்வாகசபையும் அமைக்கப்பட்டது.

# 'ஆசிரியர்கள் இறைவனுக்கு சமமானவர்கள்'

யாழ்ப்பாணம், திங்கள்



மூளாய் அ. மி. ஸ்தான பாடசாலையில் கடந்த 27 வருடகாலமாகத் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய திருவாளர் க. ஞா. யோசேப் ஓய்வுபெறுவதை முன்னிட்டு அண்மையில் மூளாய் பழையமாணவர்களால் மேற்படி பாடசாலையில் ஓர் சேவைநலம் பாராட்டுவிழா நடைபெற்றது. முதலில் மூளாய் ஆலடியிலிருந்து திரு. யோசேப் தம்பதிகள் மேளவாத்தியத்தோடு பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டனர்.

அ மி. ஸ்தான பாடசாலை மண்டபத்தில் தேவாரத்துடன் கூட்டம் திரு. அ அமிர்தலிங்கம் தலைமையில் ஆரம்பமானது.

தலைமை உரையில், ஆசிரியர்கள் இறைவனுக்குச் சமமானவர்கள் என்னும் மாணவர்களின் நிலையை நன்கு உணர்ந்து அவர்களை நல்வழிப்படுத்துபவர்கள் என்றும் எனவே இதுவிடயத்தில் திரு, யோசேப் பாடசாலையையும், பிள்ளைகளையும் தன்னுடைய சொத்துக்கள் போன்று கருதி அயராது உழைத்தவரென்றும் திரு. அமிர்தலிங்கம் கூறினர்.

மலாயன் பென்சனியர் திரு. சதாசிவம்ஓய்வுபெறும் தலைமைஆசிரியருக்குபொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். இதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவிகள் அன்னாரின் சேவையைக் குறித்து இன்னிசைவிருந்தளித்தனர். மேற்படி பாடசாலையில் அனேக காலம் கடமையாற்றி ஓய்வுபெற்று மறைந்த திரு க. செல்லத்துரை ஆசிரியப் பெருந்தகையின் உருவப்படத்தை ஒய்வுபெறும் தலைமை ஆசிரியர் அவரின் சேவையைப் பெரிதும் பாராட்டி அன்னார் தனது குருதேவர் எனக் கூறித்திரை நீக்கம் செய்து வைத்தார்.

மானிப்பாய் மெமோறியல் கல்லூரி ஆசிரியர் திரு. கா. சின்னத்துரை ஓய்வு பெறும் ஆசிரியரின் சேவையையும் கடமை உணர்வையும் பாராட்டினர்.

சுழிபுரத்தின் முன்னாள் தபாற்கந்தோர் அதிபரும் சமாதான நீதவானுமான திரு. இ. தம்பையா பேசுகையில் திரு யோசேப் கடமை, செயற்றிறன், நிர்வாகத்திறன்பற்றி வெகுவாகப் பாராட்டி உரையாற்றினர்.

பழைய மாணவர்கள் சார்பில் செல்வன் வ. கணபதிப்பிள்ளையினால் சேவை நலம்பாராட்டு உபசரணை வாழ்த்துப்பா வாசித்தளிக்கப்பட்டது. மானிப்பாய் மெமோறியல் கல்லூரி ஆசிரியரான திரு மு. குமாரவேல் பேசினர்.

பழையமாணவிகளின் சார்பில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசினர்.

கூட்டுறவு சமாஜத் தனதிகாரி திரு. கணபதிப்பிள்ளை. பொன்னாலையைச் சேர்ந்த சமாதானநீதவான் திரு அ ஜே. ம. மயில்வாகனம், பழைய மாணவன் திரு சி சின்னராசா ஆகியோரும் பாராட்டுரைகள் வழங்கினர் பாடசாலையின் உப அதிபர் திரு மை. ஞானப்பிரகாசம் கடமைதவறாக் கண்ணியமுள்ள ஆசிரியர் எனப் போற்றினா.

மூளாய்க்கிராமசபைஉறுப்பினரும் பழைய மாணவருமான திரு. செ. வீரபத்திரன் பழையமாணவர் சார்பில் பொற்கிழி வழங்கினர். பாராட்டுவிழா நாயகன் தமக்கும் பாரியாரவர்களுக்கும் எடுத்த பெருவிழாவிற்கு நனறி தெரிவித்துப்பேசினர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 20—1—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை. 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசைவேளை, 8-15 இன்னாமியகீதங்கள்,

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு6-15இசைப்பயிற்சி. 6-30 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 விளையாட்டு விமர்சனம், 9-40 நாதஸ்வரம், 10-30 செய்தித் தொகுப்பு.

## மறைவுக்கு அனுதாபம

உடுப்பிட்டி, செவ்.

'தோழர் சபாரத்தினம் பொதுமக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு சேவை என்பதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர். அவரது மறைவு சமுதாய முன்னேற்றத்திற்கு ஏற்பட்ட பெரும் இழப்பாகும். கரவெட்டிப் பகுதி மக்களின் துயர் போக்கத் தன்னலமின்றி உழைத்த இவரை இப்பகுதி மக்கள் என்றென்றும் மறக்க முடியாது'

இவ்வாறு வடமராட்சிப் பகுதி கம்யூனிஸ்ட் வாலிப முன்னணிப் பொருளாளரான திரு. எஸ். சபாரத்தினத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து நெல்லியடி கம்யூனிஸ்ட் வாலிப முன்னணியினர் நடத்திய அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் திரு. சி மகாலிங்கம் குறிப்பிட்டார்

இவ்வனுதாபக் கூட்டம் வடமராட்சிக் கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பாளர் திரு. பொன். குமாரசாமி தலைமையில் நடைபெற்றது

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

# எப்போதும் ஜி.ஜி.யே தலைவர்

## கொழும்பு தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி தீர்மானம்

கொழும்பு, திங்கள் "தேர்தலில் தோற்றாலும் வென்றாலும் இலங்கைத் தமிழ்க்காங்கிரசுக்கு திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமே தலைவராவார்.

இவ்வாறு கொழும்பு தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணி தீர்மானித்துள்ளது. இக்கூட்டத்தில் திரு. ஆ. தியாகராசா எம். பி. கூறுகின்ற புதிய இளந் தலைமை என்ற கருத்தைஏற்றுக்கொள்ள முடியாதென்றும் கொழும்பு தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

சொல்லாலும் செயலாலும் இன்று தமிழ்க்காங்கிரஸின் பிரதிநிதிகளாக உள்ள ஆட்சிமன்ற உறுப்பினர் மூவர்களும் கட்சியின் நம்பிக்கையை இழந்துவிட்டனரென்றும், தற்போது தமிழ்க் காங்கிரஸ் எம். பிக்களாக உள்ளவர்களை நீக்கி அவர்களின் ஸ்தானத்துக்கு திருவாளர்கள் ந. சிவநேசன், எஸ். திருநாவுக்கரசு, ரி. சிதம்பரப்பிள்ளை ஆகியவர்களை நியமிப்பதென்றும் வாலிபமுன்னணி தீர்மானித்துள்ளது. திரு மு சிவசிதம்பரம், திரு எஸ் சரவணமுத்து ஆகியவர்கள் தொடர்ந்து போஷகர்களாக இருக்கவேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்துக்கு திரு. மயூரநாதன் தலைமை தாங்கினார்.

---

## யாழ்ப்பாணத்தில் சச்சிதானந்தஜி

யாழ்ப்பாணம், செவ். யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தஜி நாளை யாழ்ப்பாணம் வருகிறார். அவருடன் அமெரிக்க ஆத்மீகச் சீடர்களும் வருகின்றார்கள்.

நாளையும் மறுநாளும் யாழ்ப்பாணத்தில் தங்குவார்கள். திவ்விய ஜீவன சங்கத்தினர் நாளை மாலை 5-30 மணிக்கு கல்லூரியிலுள்ள திவ்வியஜீவன மண்டபத்தில் உபசார விழா நடத்தவர்.

## இன்று

யாழ்ம்பாணம், புதன் இன்று யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் மேற்படி சங்கத்தாரால் சங்கதின் போஷகர் யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தஜிக்கும் அவரது அமெரிக்க ஆத்மயோக சீடர்களுக்கும் யாழ். நகர் வருகையை முன்னிட்டு பாராட்டு பிரிவு உபசாரவிழா ஒன்று நடைபெறுகிறது.

இவ்விழாவில் அமெரிக்க சீடர்களின் பஜனையும், உரைகளும், சதசங்கம், சாதனை, பஞ்சமுக வீணை வாத்தியஇசை, அத்துவித படக்காட்சி, இன்னிசை நிகழ்ச்சிகள் ஆகியன இடம் பெறுகின்றன.

---

## வடபகுதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

கொழும்பு றோயல் கல்லூரியில் படித்த சிங்கள மாணவன் குறைந்த புள்ளி எடுத்தாலும் அவர் உயர் கல்வி படிக்க வாய்ப்புஅளிக்கப்படுகிறது. தெல்லிப்பளையில் உள்ள மாணவன் கூடிய புள்ளிகள் பெற்றாலும் அவன் அனுமதிக்கப்படுவதில்லை. கிராமப் பகுதிக்கு கூடிய இடம் அளிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

ஊர்காவற்றுறை எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் பேசுகையில்:-

அன்று யு என். பி. அரசு தமிழ்மக்களின் உரிமைகளை வழங்க முடியாதிருந்தது. ஏனெனில் யு என் பி அன்றுபெரும்பான்மைபலம் வாய்த்திருக்கவில்லை. ஆனால் இன்றைய அரசு யாருக்கும் பயப்படத் தேவையில்லை. நல்ல பலத்துடன் விளங்குவதால் எமது உரிமைகளைத் தரலாம். சோஷலிசம், சமதர்மம் ஆகிய முறையில் ஆட்சி நடக்கும் எனக் கூறும் அரசு தமிழ் மக்களை அழித்து அடிமைப்படுத்த முனைகிறது. ஒரே இனத்தை மற்றொரு இனம் அடக்கி ஆழ்வது தான் சமதர்மமா? என்றார்.

உடுவில் எம் பி வி தர்மலிங்கம் பேசுகையில்:- பல ஆயிரக்கணக்கான காலமாக இந்நாட்டில் தமிழர் அரியணை ஏறி ஆண்டார்களேதவிர இரண்டாந்தரப் பிரஜைகளாகவோ, அடிமைகளாகவோ வாழவில்லை. இன்று ஏற்பட்டுள்ள நிலைசரித்திரத்தில் ஏற்படாததாகும் பண்டைக் காலத்தில் ஒரு இனத்தை அழிக்க படையெடுப்பது வழக்கம். இன்றைய அரசு புதிய அரசியல் திட்டத்தால் தமிழையே அழிக்க முனைகிறது.

மஸ்கெலியா ஓயா திட்டத்தின்படி மின்வடக்குடன் இணைப்பது ஒரு சாதாரணமான காரியமல்ல. அரசு ஏற்பட்டு 8 மாதமாக வில்லை திட்டம்போட்டு லக்சபானமின் இங்கு கொண்டு வந்துவிட்டோம் என்று கூறுகிறார்கள் தேசிய அரசு இருந்த காலத்தில் தமிரசுக்கட்சி அரசாங்கத்திடம் ஆரல் எழுப்பியதன் பயனாக இன்று இம்மின்சக்தி கிடைத்திருக்கிறது- இதைவிட்டுத் தாம் செய்து முடித்ததாக கூறுகின்றனர் கூட்டணிவாதிகள்.

தமிழரசுமாதர் முன்னணித்தலைவி திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம்பேசுகையில்: இன்று ஏற்பட்டுள்ள அபாயகரமான நிலையில் தமிழ் மக்கள் பெண்கள் முதற் கொண்டு சகலரும் சேர்ந்து தமிழ் சமுதாயத்தை முன்னேற்ற இன்றே வீரசபதம் எடுக்க வேண்டும் என்றார். மற்றும் கோப்பா எம் பி சி கதிரவேற்பிள்ளை, எம் ஆலாலசுந்தரம் செனட்டர் நடராசா ஆகியோர் உட்பட பலர் பேசினர்.

## தேசிய சுவீப் முடிவுகள்

நேற்று இழுக்கப்பட்ட தேசிய சுவீப்பின் விபரம் வருமாறு:-

முதலாம் பரிசு

12 V 0414 ரூ. 66,800

இரண்டாம் பரிசு

08 B 0784 ரூ. 26,720

மூன்றாம்பரிசு

12 K 0542 ரூ. 66.80

(தலா 334 ரூபாய் பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு)

| | |
|---|---|
| 22 Z 0879 | 60 W 0459 |
| 09 S 0449 | 23 E 0468 |
| 23 A 0782 | 11 F 0164 |
| 07 T 0475 | 04 P 0243 |
| 09 F 0247 | 15 S 0611 |
| 15 R 0667 | 27 R 0016 |
| 27 G 0984 | 24 N 0845 |
| 24 Z 0613 | 02 J 0362 |
| 22 O 0025 | 06 X 0943 |
| 26 U 0932 | 19 W 0556 |
| 03 T 0219 | 06 Y 0515 |
| 26 X 0395 | 15 Y 0006 |
| 25 H 0815 | 06 Y 0252 |
| 22 A 0667 | 09 B 0102 |
| 09 Y 0975 | 09 B 0674 |
| 05 G 0628 | 16 B 0014 |
| 09 Q 0691 | 22 B 0619 |
| 08 O 0644 | 03 M 0569 |
| 24 M 0169 | 21 B 0955 |
| 22 H 0147 | 11 A 0515 |
| 07 K 0865 | 13 F 0744 |
| 14 K 0769 | 22 A 0820 |
| 04 C 0021 | 03 J 0495 |
| 05 R 0220 | 25 U 0446 |
| 02 T 0463 | 23 [illegible] 0145 |
| 27 O 0550 | 05 H 0550 |
| 28 C 0680 | 19 H 0089 |
| 15 H 0325 | 12 Y 0478 |
| 26 J 0107 | 03 K 0722 |
| 20 Z 0318 | 20 F 0881 |
| 03 S 0811 | 11 O 0495 |
| 27 J 0872 | 27 D 0613 |
| 19 R 0104 | 01 T 0191 |
| 26 J 0790 | 29 P 0781 |
| 26 D 0699 | 04 G 0308 |
| 27 D 0194 | 26 L 0839 |
| 20 B 0729 | 16 T 0179 |
| 20 F 0866 | 26 D 0397 |
| 07 L 0567 | 19 B 0153 |
| 09 C 0703 | 30 C 0810 |
| 02 W 0461 | 22 R 0703 |
| 18 R 0606 | 15 J 0484 |
| 28 Y 0450 | 19 R 0288 |
| 20 U 0495 | 12 S 0865 |
| 03 O 0055 | 23 B 0057 |
| 31 B 0630 | 03 O 0523 |
| 18 V 0607 | 27 P 0296 |
| 03 A 0222 | 31 P 0002 |
| 26 K 0482 | 06 G 0185 |
| 23 F 0382 | 27 D 0079 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை)

## பிரிவுபசாரம்

அம்பன், செவ்வாய் தாளையடி அரசினர் வைத்தியசாலையில் இருந்து தம் புல்லவுக்கும், இரத்தினபுரிக்கும் இடமாற்றலாகிச் செல்லும் டாக்டர்கள் திரு. எம். செல்வரட்ணம், திரு. ஜே. சத்தியசீலன் ஆகியோருக்கு அவ்வூர் மக்கள் பிரிவுபசாரம் அளித்தனர்.

---

## பஸ் சேவை சீர்கேடு

கிளிநொச்சி, செவ்வாய் கண்டாவளைக்கு கிளிநொச்சி உப பஸ் டிப்போ மூலமும், யாழ். டிப்போ மூலமும் தினமும் 5 சேவைகள் நடைபெறுவதாகவும் அச்சேவைகள் தற்போது சீர்கெட்டுள்ளதாகவும் இ. போ ச தலைவருக்குக் கண்டாவளை பகுதி மக்கள் சார்பாக திரு. வே கந்தசாமி கடிதம் எழுதியுள்ளார். இச்சேவைகளைச்சீர்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தலைவரைக் கேட்டுள்ள இவர் பருத்தித்துறை டிப்போ மூலம் கண்டாவளைச் சேவைகளை நடாத்தினால் பஸ்சேவைச் சீர்கேடு குறையுமெனச் சுட்டிக்காட்டியுள்ளார். இவர் எழுதிய கடிதத்தின் பிரதிகள் பிராந்திய முகாமையாளருக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

## மரண அறிவித்தல்

திருமதி றெஜினா எசெக்கியெல் (ஆசிரியை புனித சவேரியார்கல்லூரி, திருக்கோணமலை) அவர்கள் காலமகிவிட்டார்கள் ஆசிரியர் எஸ் எசெக்கியெஸ் அவர்களின் அன்பு மனைவியும், மரியாம்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை (பொன்னு) தம்பதிகளின் புத்திரியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (20-1-71) மாலை 4-30 மணிக்கு 6, அடம்பன் வீதியிலிருந்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதாவின் ஆசனக்கோவில் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 2448

## 'மொழியைக்காக்க தமிழ்க் கலைகளை வளர்க்கவேண்டும்'

— எஸ் ஜே வி

மாவிட்டபுரம், செவ். கொழும்பில் இரண்டு மூன்று தலைமுறைகளாக இருந்துவந்தவர்கள் எல்லாரும் இன்று தமிழை புறக்கணிக்கின்றனர், ஒருசிலர் சிங்களத்தையும், மற்றும் சிலர் ஆங்கிலத்தையும் பேசுகின்றனர் இப்படியாக நிலை மாறி வரும் இந்நேரத்தில் நாம் எமது கலைகள் மூலம் தமிழை வளர்க்க வேண்டும் நான் தமிழ்க்கலைகளைப்பற்றி அறிந்தவனல்ல தமிழுக்காகப் போராடுபவர்களில் நானும் ஒருவன். கலைகளில் கர்நாடக இசை தமிழரின் ஒரு பொக்கிஷம். கர்நாடகஇசையுடன் சேர்ந்து நாடகக்கலையும்மற்றும் எமது கலைகளும் வளர வேண்டும் எமது கலை கலாச்சாரம் வளர எமது மொழியைப் பாதுகாக்கும் நிலைஏற்படும்'

அம்பனை கலைப்பெருமன்ற 3-வது ஆண்டு உழவர்விழாவில் உரையாற்றிய தமிழரசுக்கட்சித் தலைவர் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் மேற்கண்டவாறு கூறினார்

'இந்நாட்டில் உள்ள பல் வேறுஇனத்தவர்களிடையே ஒற்றுமை ஏற்படுத்த வேண்டுமானால் அரசியல்வாதிகளின் பரிவர்த்தனையால் பயனில்லை. இங்குள்ள கலைஞர்களை சிங்களப்பகுதிகளுக்கு அனுப்பியும் அங்கிருந்து கலைஞர்களை அழைத்தும் ஒரு கலைப் பரிவர்த்தனையை ஏற்படுத்தினால்தான் இந்த நாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்தலாம்' என இவ்வைபவத்தில் கலந்து கொண்ட வட்டார வித்தியாதரிசி திரு எஸ்சோமசுந்தரம் கூறினார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி திறந்த வெளியரங்கில் நடந்த இவ்விழாவிற்கு தலைமை வகித்து அவர் தொடர்ந்துபேசுகையில்:-

ஒரு சாகித்தியத்தின் கலாச்சாரத்தை மற்ற சாகித்தியத்திலிருந்து பிரிப்பதால் கலாச்சாரம் வளர்ச்சியடையாது ஒவ்வொரு சாகித்தியத்தாருக்கும் ஒவ்வொரு விதமான கலாச்சாரங்கள் உண்டு எமது தமிழ்க்கலாச்சாரம் பழைமை வாய்ந்தது எமது கலாச்சாரத்துடன் ஒன்றிப்பிணைந்த கர்நாடக இசை, நாடகக்கலைக்குஇன்று மக்கள் ஆதரவு கொடுப்பதில்லை நாம் கலைஞர்களை போற்றினால்தான் மற்றவர்களும் போற்றுவார்கள் ஆகவே நாம் கலைஞர்களைப் போற்ற வண்டும்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு எஸ் லகாதேவன், திரு. வி பொன்னம்பலம் உட்படப் பலர் உரையாற்றினர்.

## ஆணும்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வையாற்றில் வாசித்துவிட்டாரே என்று ஆச்சரியமாயிருந்தது.

ஸ்ரீவாஞ்சியம் மவி என்சவர் ஆசலமதுரை மணி ஐயரைப் போலப்பாட முயன்று அதில் ஓரளவுவெற்றியும் பெற்று விட்டார். அதே சாரீரம், அதே 'லலலவ்லூஸ்', அதே சர்வலகு நடையில் கற்பனா ஸ்வரம்! வருங்காலத்தில் மதுரையார் இல்லாத குறையை இவர் தீர்த்து வைப்பாரோ!

மன்னார்குடி சாவித்திரியம்மாள் இருபது வருடங்களுக்கு முன்புறேடியோவில் முழுநேரக்கோட்டுவாத்தியக் கச்சேரி செய்தவர் இவரையும் காலம் பலி எடுத்துவிட்டது முந்திய விறுவிறுப்பும் கனிவும் எங்குதான் போயினவோ!

மணக்கால் ரங்கராஜனின் பாட்டு ஒரு குடும்ப விஷயமாக முடிந்தது மனைவியாரும் சேர்ந்து பாடினார். இன்னொரு உறவினர் (மகனோ?) மிருதங்கம் வாசித்தார் மிருதங்கத்துக்கு வேண்டாத நேரங்களில் 'அப்ளோஸ்' கிடைத்ததிலிருந்து இவர் ஒரு சிறுவனாயிருக்கலாமென்று ஊகிக்கிறேன்.

ஞாயிற்றுக்கிழமை இரவு 9 அரை மணியளவில் அடுத்து சித்தூர் சுப்பிரமணியம் பிள்ளை பாடுவார் என்ற அறிவிப்பைக் கேட்டதும் தூக்கிவாரிப் போட்டது இராமநாதன் சங்கீதஅகடமி அதிபராயிருப்பவர் தயமும் குரு தரிசனம் செயவதற்கு இங்கிருந்துபறந்துவிட்டார்! கூட அவருடைய புத்திரி திருமதி ரேவதி ரத்தினசாமியும் பாடினார்கள். சித்தூரார் பாட்டுக்கு விமர்சனம் ஏது! மேல் பஞ்சமம் எல்லாம் சரசரக்காவல் இப்பொழுது 'கிளீன்'கப் பிடிக்கிறார் ஐந்தாறு கீர்த்தனைகள் அழகாகப் பாடப்பட்டன.

கர்நாடக சங்கீதக் கச்சேரிகளில் ஆணும் பெண்ணும் சேர்ந்து பாடும் வழக்கம்ஏன் ஏற்படவில்லை? மணக்கால் தமது மனைவியோடும் சித்தூரார் தமது புத்திரியோடும் பாடினார்கள். பஞ்சரத்தினம் பாடப்படும் போதும் ஒரு பெண்குரலும் கேட்டது. காதுக்கு ஒரு புதுமையாயும் இனிமையாயும் இருந்தது. புதிய புதிய உத்திகள் கையாளப்படும் இக்காலத்தில் இதுவும் ஒரு புதுமையாயிருக்குமல்லவா?

—வி. என். பி.

## விரைவில் கண்ணாடித் தொழிற்சாலை

கிளிநொச்சி, செவ் வல்லிபுரத்தில் விரைவில் கண்ணாடித் தொழிற்சாலையை நிறுவ அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிய வருகிறது. செக்கோசெலவக்கிய அரசாங்கத்தின் தொழில் நுட்பஉதவியுடனேயே இத்தொழிற்சாலை ஆரம்பிக்கபடவுள்ளதாக இடதுசாரிப்பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். இம்மாதம் 26 ம்திகதி வடக்கே வரும் கைத்தொழிலமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா வல்லிபுரத்தில் உள்ள வெண்மணல் மேடுகளைப் பார்வையிடுவார் ஏப்ரல் மாதத்தில் இத்தொழிற்சாலை அமைப்பு வேலைகள் தொடக்கப்படலாமெனவும் நம்பப்படுகிறது.

## பொலிசார் தேடுகின்றனர்

கிளிநொச்சி, செவ்' இங்குள்ள தனியார் நகைக்கடைகள் இரண்டில் போலித்தங்கநகைகளை விற்பனை செய்ததாகச் சந்தேகிக்கப்படும் ஒருவரைக் கிளிநொச்சிப் பொலிசார் தேடுகின்றனர். சென்ற வார இறுதியில் இச்சந்தேகநபர் போலிநகைகளை விற்றுப் பணத்தைப் பெற்றுச் சென்றாராம். போலிநகைகள் எனக் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் நகைக்கடை உரிமையாளர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்தே சந்தேகநபரைப் பொலிஸார் தேடுகின்றனர்.

இப் பத்திரிகை 'ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 63 - ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு தை மாதம் 20-ந் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.